# செயலாற்றுகை அறிக்கை - 2018

## அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

## நிதி அமைச்சு

## கொழும்பு 01

## உள்ளடக்கம்


**1.0 பணிச் சட்டகம்**

1.1 அறிமுகம் 06
1.2 தொலைநோக்கு
1.3 பணிக்கூற்று
1.4 பணிகள் மற்றும் பரப்பெல்லை
1.5 அலுவலக கட்டமைப்பு

**2.0 அரசிறைக் கொள்கை அபிவிருத்தி - 2018**

2.1 மேன்நோக்கு (அரசிறைத் திரட்சிச் செயற்பாடு)
2.2 அரசிறைக் கொள்கை மற்றும் நடவடிக்கைகள்
2.3 அரசாங்க வருமானத்தின் போக்கு
2.3.1 அரசிறை வருமானம்
2.3.2 வரி வருமானம்
2.3.3 வரியல்லா வருமானம்

**3.0 அரசிறை மூலோபாயங்கள் மற்றும் சவால்கள் - 2018**

3.1 அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயங்கள்
3.2 பிரதான அரசிறைக் கொள்கைச் சவால்கள்

**4.0 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்பச்) சட்டத்தின் நியதிகளுக்கமைவான ஆவண மார்கச் செயற்பாடுகள்**

4.1 ஆண்டறிக்கை
4.2 அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை
4.3 அரசிறை முகாமைத்துவ அறிக்கை
4.4 செயலாற்றுகை அறிக்கை
4.5 தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழான பதிவுகள்

**5.0 நிருவாக மற்றும் நிதித் துறைகளின் செயலாற்றுகை**

5.1 பதவியணி பற்றிய விபரம்
5.2 திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்
5.3 நிதி மற்றும் கணக்குகள்

**அட்டவணைகள்**


2.1.1 அரசிறை வருமானத்தின் போக்கு

2.2.1 பிரதான அரசிறைச் செயற்பாடுகள் - 2018

2.3.1.1 மதிப்பிடப்பட்ட மற்றும் மெய் வருமானம் - 2018

2.3.1.2 அரசாங்க வருமானம்

2.3.1.3 அரசாங்க வரி வருமானம் - மூல அடிப்படையில்

2.3.2.1 வருமான வரி செயலாற்றுகை

2.3.2.2 பெறுமதிசேர் வரி வருமானம்

2.3.2.3 மதுபானம் மற்றும் சிகரெட் என்பனவற்றிலிருந்தான உற்பத்தி வரி வருமானம்

2.3.2.4 மோட்டார் வாகனங்களின் இறக்குமதிகள்

2.3.2.5 விசேட வியாபாரப் பண்ட அறவீடுகள்

2.3.2.6 தே.க.வரி வருமானத்திலிருந்தான மாகாண சபைகளுக்கான மாற்றல்கள் - 2018

2.3.2.7 சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வருமானம், விவசாயத் துறை அபிவிருத்திக்கான மானியங்கள்

2.3.3.1 வரியல்லா வருமானம்

4.5.1 தகவல் அறியும் உரிமை தொடர்பான விண்ணப்பங்களின் சுருக்கம் - 2018

5.1.1 பதவியணி பற்றிய விபரம் -2018 (2018.12.31 இல் உள்ளவாறு)

5.2.1 உள்நாட்டுப் பயிற்றுவிப்புக்கள் -2018

5.2.2 வெளிநாட்டுப் பயிற்றுவிப்புக்கள் மற்றும் மாநாடுகள் -2018

5.3.1.1 வரவுசெலவுத் திட்ட ஏற்பாடுகள் மற்றும் அதன் பயன்பாடு

5.3.2.1 முற்பணக் கணக்குகளின் பயன்பாடு -2018


**வரைபுகள்**


2.1.1 அரசாங்க வருமானம்

2.3.1.1 அரசிறை வருமானத்தில் வரி மற்றும் வரியல்லாத வருமானத்தின் பங்களிப்பு (2011 – 2018)

2.3.2.1 நேரடி வரி (2011 – 2018)

2.3.2.2 வருமான செயலாற்றுகை

2.3.2.3 நேரடியல்லா வரிகள் 2011 - 2018

2.3.2.4 சிகரெட் உற்பத்தி மற்றும் உற்பத்தி வரி வருமானம்

2.3.2.5 மதுபான உற்பத்தி மற்றும் மதுவரி வருமானம

2.3.2.6 இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரிகள் 2011 - 2018

2.3.3.1 வரியல்லா வருமானம்

# 1.1 பணிச் சட்டகம்

## 1.1 அறிமுகம்

நாடு எதிர்பார்க்கின்ற சமூக மற்றும் பொருளாதார குறிக்கோள்களை அடையும் வகையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், நிரல் அமைச்சுக்கள் ஏனைய முகவர்கள்/நிறுவனங்கள் மற்றுமதனியார் துறையினருடன் கலந்தாலோசித்து அரசாங்கத்தின் பரந்தளவிலான அபிவிருத்தி வேலைச்சட்டகத்தினுள் அரசிறைக் கொள்கையினை உருவாக்குவதும் மற்றும் அதனைச் செயற்படுத்துவதும் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் பிரதான இலக்குகளாகும்.

நாட்டின் அரசிறைக் கொள்கையில் எதிர்பார்க்கப்படுகின்ற விளைவுகளை அடைவதற்ககுத் தேவையான மிகச் சரியான சீர்செய்கைகளை மேற்கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில், வருமானம், செலவினம் நிதியளிப்புச் செயற்பாடுகள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பேரண்டப் பொருளாதார அபிருத்திகள் என்பவற்றை பகுப்பாய்வுசெய்தல் அதேபோன்று, நாட்டின் வரி விதிப்புக் கொள்கைகளை உருவாக்கல் என்பன இத்திணைக்களத்தின் முக்கிய பொறுப்பாகும்.

அரசிறை மூலோபாயக் கூற்று, வரவுசெலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை, அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை, இறுதி வரவுசெலவுத் திட்ட நிலைமை அறிக்கை மற்றும் தேர்தலுக்கு முன்னரான வரவுசெலவுத் திட்ட நிலைமை அறிக்கை என்பன உள்ளடங்கலாக மேற்குறித்த அறிக்கைகளையும்அரசிறை முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் வெளியிடுவது இத்திணைக்களத்தின் முக்கிய பணியாகும்.

நடுத்தரக் காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கு அதிகமான பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான ஆற்றல்களை வழங்குவதற்காக அரசிறைக் கொள்கைத் திணைக்களம் தனது செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கான முக்கியத்துவத்தினை அடையாளங் கண்டுள்ளது. அதன் மூலம் நடுத்தர வருமான பொருளாதார சூழலில் செயற்படுவதற்காக பொதுத் திறைசேரியின் நிலைமாற்றத்திற்கு வசதியளித்தல்.

## 1.2 . தொலைநோக்கு

''நிலைபேறான அரசிறைக் கொள்கையொன்று நிறுவப்படுவதை உறுதிசெய்தல்''

## 1.3 பணிக்கூற்று

அரசின் பரந்தளவிலானஅபிவிருத்திச் செயற்பாட்டு சட்டகத்தினுள் அரசிறைக் கொள்கையினைஉருவாக்குதல் மற்றும் செயற்படுத்தல்.

## 1.4. பணிகள் மற்றும் பரப்பெல்லை

அரசாங்க, தனியார் மற்றும் சர்வதேச பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து நடுத்தர கால வரவு செலவுத் திட்ட சட்டகத்தினுள் அரசிறைக் கொள்கையை வகுத்தமைத்தலும் அமுல்படுத்தல்.


சுங்கத்தீர்வை மற்றும் பிற விசேட வியாபாரப் பண்ட அறவீடுகள் நீங்கலாக ஏனைய வரிக்கொள்கைகள் மற்றும் அதனோடு தொடர்பான பிற சட்ட ஏற்பாடுகளை தயாரித்தல்.

அரசாங்க வருமானத்தினைத் திரட்டும் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்து திணைக்களங்களோடும் முறையாக ஒருங்கிணைப்பினைப் பேணி அரசாங்க வருமானம் மற்றும் பெறுகை உள்ளடங்கலாக அரசிறை எண்ணக்கருக்கள் மற்றும் அரசிறைச் செயற்பாடுகளினை முகாமை செய்தலும் விதப்புரை செய்தல்.

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அனைத்து அறிக்கையிடல்களையும் செயற்படுத்துதல்.

அரசிறை மற்றும் பேரண்டப் பொருளாதாரம் தொடர்பிலான பல்வேறுபட்ட ஆய்வுகளையும் பகுப்பாய்வுவளையும் மேற்கொள்ளல்.

## 1.5 அலுவலக கட்டமைப்பு - 2018



## 2.0 அரசிறை அபிவிருத்திகள் – 2018

### 2.1 மேன்நோக்கு (அரசிறைத் திரட்சிச் செயற்பாடுகள்)

“தூர நோக்கு 2025” என்ற அரசாங்கத்தின் கொள்கைச் சட்டத்தோடு இணைந்த வகையில், அரசாங்கம் 2018 ஆம் ஆண்டில் அதிகரித்த வருமானத் திரட்சியில் மாத்திரம் கவனஞ் செலுத்தாது மேம்பட்ட வினைத்திறனான செலவிடல் முறைமை மீதும் அதிக கவனஞ் செலுத்தியுள்ளது. அதற்கமைய, மொத்த அரசிறை வருமானமானது, 2017 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற ரூபா 1,839 பில்லியனோடு ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டின் சனவரி – திசெம்பர் வரையான காலப்பகுதியில் ரூபா 1,932 பில்லியனுக்கு 4.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் இலாப மாற்றல்கள், விற்பனைகள், அறவீடுகள் என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன காரணமாக மொத்த வரி வருமானம் ரூபா 1,712 பில்லியனுக்கு 2.5 சதவீதத்தினாலும் வரியல்லாத வருமானம் ரூபா 208 பில்லியனுக்கு 28.6 சதவீதத்தினாலும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. இதேவேளை நன்கொடைகள் 2017 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 8.0 பில்லியனோடு ஒப்பிடகையில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 12.3 பில்லியனுக்கு 53.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துக் காணப்பட்டது.

2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தினைச் செயற்படுத்தல், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் அரசிறை வருமான நிருவாகம் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) ஊடாக வரி நிருவாக செயல்முறையினை பலப்படுத்தல், வரி விகிதங்கள் மற்றும் வரி அடிப்படைகளை வரிவுபடுத்தல் என்பன வருமான வரியிலிருந்து திரட்டப்பட்ட வருமானம் 310.5 பில்லியனுக்கு 13.1 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டதோடு பிடித்து வைத்தல் வரியிலிருந்தான வருமானம் வீழ்ச்சியடைந்திருந்தது.

நிலக்கரி, பால்மா, சீமெந்து மற்றும் உராய்வு நீக்கிகள் போன்றவற்றின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் உள்நாட்டு செயற்பாடுகளில் ஏற்பட்ட விரிவாக்கம் என்பன 2018 ஆம் ஆண்டில் பெறுமதிசேர் வரி வருமானம் ரூபா. 461.7 பில்லியனுக்கு 4.0 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு உதவியுள்ளதோடு, பெறுமதிசேர் வரியில் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் குறிப்பாக சுகாதாரத் துறைக்கு வழங்கப்பட்ட விலக்களிப்பு காரணமாக 2018 ஆம் ஆண்டுக்காக இலக்கிடப்பட்ட எல்லையினை அடைவதனை விட்டும் பின்னடைவினை ஏற்படுத்தியுள்ளது.

மோட்டார் வாகனம், மதுபானம், சிகரெட்டு மற்றும் புகையிலை என்பனவற்றிலிருந்து அதிகரித்த உற்பத்தி வரியிலிருந்து திரட்டப்பட்ட வருமானம் காரணமாக உற்பத்தி வரியானது ரூபா 484.3 பில்லியனுக்கு 3.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், பெற்றோலியப் பொருட்களிலிருந்தான உற்பத்தி வரியானது மீளாய்வு ஆண்டில் 10.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

அடையாளங் காணப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பனவற்றிற்கு 7.5 சதவிகிதம் என்ற நியம வீதத்திலிருந்து 2.5 சதவீதத்திற்கு சலுகை வரி விகிதம் வழங்கப்பட்ட போதிலும் இடைநிலைப் பொருட்கள் மற்றும் உரம் என்பனவற்றின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் ஐ.அ.டொ. இற்கு எதிராக அந்நியச் செலாவணி விகிதத்தின் தாக்கம் காரணமாக துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்தான வரி வருமானம் ரூபா 114 பில்லியனுக்கு 11.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.

நிர்மாணச் சேவைகள், அடுக்குமாடி விற்பனை மற்றும் உள்நாட்டு சேவை வழங்களின் பேரில் வெளிநாட்டு ஏனைய அலகுகளில் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்கின்ற பிரயான முகவர் நிறுவனங்கள் என்பனவற்றிற்கு

விலக்களிப்புக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் தேச கட்டுமான வரியானது ரூபா 71.4 பில்லியனுக்கு அதிகரித்துக் காணப்பட்டது.

இணைய தளம் மற்றும் அழைப்புக் கால எல்லை என்பனவற்றின் மீது தொலைத் தொடர்பாடல் அநவீட்டினை நீக்கியமை என்பன காரணமாக தொலைத் தொடர்பாடல் அறவீட்டிலிருந்தான வருமானமானது ரூபா 28.3 பில்லியனுக்கு 15.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அவ்வாறே, அடையாளங் காணப்பட்ட 253 பொருட்கள் மீது செஸ் வரியினை நீக்கியமை காரணமாக செஸ் வரியிலிருந்தான வருமானமும் 10.4 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியிலிருந்தான இலாப மாற்றல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு குறிப்பாக அரச பணி ஊழியர்களின் அதிகரித்த பங்களிப்பு காரணமாக வரியல்லாத வருமானம் ரூபா 207 பில்லியனுக்கு 28.7 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு காரணமாய அமைந்துள்ளது.

இதேவேளை, 2018 ஆம் ஆண்டில் அரச பணி ஊழியர்களின் சம்பளங்கள் ரூபா 626 பில்லியனுக்கும் வட்டிக் கொடுப்பனவுகள் ரூபா 852 பில்லியனுக்கும் படுகடன் மீள்கொடுப்பனவுகள் ரூபா 309 பில்லியனுக்கும் அதிகரிப்பினைப் பிரதிபலித்து மொத்த செலவினம் மற்றும் தேறிய பெறுகை என்பன ரூபா 2,692 பில்லியனுக்கு 4.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இக்காலப்பகுதியில் மீண்டெழும் செலவினம் ரூபா 2,090 பில்லியனுக்கு 8.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ள வேளையில் மூலதனச் செலவினம் மீளாய்வுக் காலத்தில் சிறிதளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் ரூபா 733 பில்லியனாகப் பதிவுசெய்யப்பட்ட ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையோடு ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் அது ரூபா 760 பில்லியனாகக் காணப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 382 பில்லியனோடு ஒப்பிடுகையில் மொத்த வெளிநாட்டு நிதியளிப்பானது 2018 ஆம் ஆண்டில் ரூபா 444 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. இதேவேளை, மொத்த தேறிய உள்நாட்டு நிதியளிப்பானது, 2017 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 352 பில்லியனோடு ஒப்பிடுகைளில் அது ரூபா 316 பில்லியனுக்கு மீளாய்வுக் காலத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது.


**அட்டவணை 2.1.1 : அரச வருமானத்தின் போக்கு**

*ரூபா.மில்*

| விடயம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 (தற்காலிக) |
|---|---|---|---|---|---|
| **மொத்த வருமானம் மற்றும் மானயங்கள்** | **1,204,621** | **1,460,892** | **1,693,557** | **1,839,562** | **1,932,243** |
| **மொத்த வருமானம்** | **1,195,206** | **1,454,878** | **1,686,061** | **1,831,531** | **1,919,949** |
| வரி வருமானம் | 1,050,362 | 1,355,779 | 1,463,689 | 1,670,178 | 1,712,318 |
| வருமான வரி | 198,115 | 262,583 | 258,857 | 274,562 | 310,449 |
| பொருட்கள் சேவைகள் வாகள் | 615,832 | 803,798 | 841,967 | 1,025,799 | 1,061,752 |
| வெளிநாட்டு வர்த்தக வரிகள் | 236,415 | 289,398 | 362,865 | 369,817 | 340,117 |
| வரியல்லாத வருமானங்கள் | 144,844 | 99,099 | 222,372 | 161,353 | 207,631 |
| **மானியங்கள்** | **9,415** | **6,014** | **7,496** | **8,031** | **12,294** |
| **மொ.உ.உற்பத்தி . % இல்** | | | | | |
| **வருமானம் மற்றும் கொடைகள்** | **11.6** | **13.3** | **14.2** | **13.8** | **13.5** |
| **மொத்த வருமானம்** | **11.5** | **13.3** | **14.2** | **13.8** | **13.4** |
| வரி வருமானம் | 10.1 | 12.4 | 12.3 | 12.6 | 11.9 |
| வரியல்லாத வருமானங்கள் | 1.4 | 0.9 | 1.9 | 1.2 | 1.4 |
| **கொடைகள்** | **0.1** | **0.1** | **0.1** | **0.1** | **0.1** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

வரைபு 2.1.1 அரசாங்க வருமானம்




## 2.2 அரசிறைக் கொள்கை நடவடிக்கைகள்

அரசிறைத் திரட்சி தொடர்பில், அரசாங்கத்தின் நடுத்தர கால வேலைச் சட்டத்தோடு இணைந்த வகையில் திணைக்களமானது 2018 ஆம் ஆண்டில் அரசிறை வருமானத் திரட்சியனை அதிகரிப்பதற்காக பல்வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வரிகளைத் திருத்துதல், வரி விலக்களிப்புக்கள் மற்றும் சலுகைகள் என்பனவற்றை ஒழுங்குபடுத்துதல், வரி அடிப்படைகளை விரிவுபடுத்தல் மற்றும் வரி திரட்டும் முகவர் நிறுவனங்கள் குறிப்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பனவற்றினை பலப்படுத்தல் என்பனவற்றினை இத்தகைய நடவடிக்கைகள் உள்ளடக்கியுள்ளன.

வரித் திருத்தங்களின் கீழ், 1,000 கி.கி. க்கு மேற்படாத இயந்திரக் கொள்வனவினைக் கொண்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் 72 மி.மீ. இற்கு மேற்பட்டும் 84 மி.மீ. இற்கு மேற்படாத சிகரெட்டுக்கள் என்பன மீதான உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வை விகிதங்கள் 2018 ஆம் ஆண்டின் ஓகஸ்து மாதத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளினால் குடிபானமல்லாத ஸ்பிரித்துக்கள் இறக்குமதியின் பேரில் மதுவரித் கட்டளைச் சட்டம் (அத்திாயம் 52) கீழ் செலுத்தக்கதான மதுவரித் தீர்வையானது 2018 ஆம் ஆண்டு ஒக்றோபர் மாதத்தில் விலக்களிக்கப்பட்டுள்ளது. அரியப்பட்ட மரப்பலகை இறக்குமதி மீது ஏற்புடையதான வரி விகிதம் 15% இலிருந்து 5% இற்கும் சீனி இறக்குமதி அல்லது இறக்குமதி மற்றும் விற்பனை மீது ஏற்புடையதான பெறுமதிசேர் வரி விகிதமும் 15% இலிருந்து 0% இற்கு பெறுமதிசேர் வரித் திருத்தங்கள் மீது குறைக்கப்பட்டுள்ளது.

சலுகை வாகன இறக்குமதித் திட்டங்களுக்காக 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ், செலுத்தத்தக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வையானது, வழங்கப்பட்ட உற்பத்தித் தீர்வை சலகைகளை ஒழுங்குபடுத்தும் வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக 2.5% துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சலுகையானது உயர் தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் என்பவற்றுக்காக வழங்கப்பட்டுள்ளது. தொகை தேயிலை ஏற்றுமதிக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பிடவைப் பைகள் மற்றும் அவற்றுக்கான மூலப் பொருட்கள் என்பவற்றுக்காக 25% அல்லது கி.கி. ஒன்றுக்கு ரூபா 25.00 என்ற விகிதத்தில் செஸ் வரி விகிதமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மலசல கூட துவாய்கள் மீது ஏற்புடையதான 30% அல்லது கி.கி. ஒன்றுக்கு ரூபா 300.00 என்ற விகிதத்தில்

ஏற்புடையதான செஸ்வரி விகிதம் நீக்கப்பட்டுள்ளது. அறைக் கட்டணங்கள் நீங்கலாக தனியார் மருத்துவ சேவை வழங்கலானது, 2018 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டத்தின் கீழ் பெறுமதிசேர் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், நிதிச் சேவைகள் வழங்கலின் மீதான இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் மற்றும் குழந்தைப் பால்மா, புத்தகங்கள், சஞ்சிகைகள், பருவக்கால வெளியீடுகள் மற்றும் இதழ்கள் போன்ற ஒரு சில வழங்கல் என்பவற்றுக்காகவும் விலக்களிப்புக்கள் வழங்கப்பட்டன. தாவரங்கள் மற்றும் பூக்கள், பிடவைகள், மரம் மற்றும் பொருட்கள், பொறித்தொகுதிகள், இயந்திர சாதனங்கள்/ கைத்தொழில் இராக்கைகள் உள்ளடங்கலாக இறக்குமதி அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை என்பனவற்றுக்கான வழங்கப்பட்டிருந்த பெறுமதிசேர் வரி விலக்களிப்புக்கள் நீக்கப்பட்டன. நீர் விளையாட்டுக்களுக்காக மோட்டார் பொறுத்தப்படாத உபகரணம் மற்றும் துணைக் கருவிகள் என்பனவற்றின் இறக்குமதிக்கான தேசக் கட்டுமான வரியினை விலக்களிப்பதற்கும் மற்றும் மதுபானம் மீது ஏற்புடையதான தேச கட்டுமான வரி விலக்களிப்பினை நீக்குவதற்கும் 2009 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, தேச கட்டுமான வரிச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது. மேலும், 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையொன்றின் கீழ் வழங்கப்பட்ட நிர்மாண சேவைகள் மற்றும் பட்டை தீட்டி மீள் ஏற்றுமதி நோக்கில் இறக்குமதி செய்யப்பட்ட இரத்தினக் கற்கள் இறக்குமதியின் பேரிலும் தேச கட்டுமான வரிக் கட்டணமும் மேற்குறித்த திருத்தத்தின் மூலம் விலக்களிக்கப்பட்டன.

சீனி, கைத்தொழில் கொழுப்பமிலங்கள், சீனியினை உள்ளடக்கியுள்ள பழங்களை அடிப்படையாகக் கொண்ட குடிபானங்களுக்காக வரி அடிப்படையினை விரிவுபடுத்தல் என்ற திட்டத்தின் கீழ், உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது. போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற்பனையுடன் சேர்த்து AFL 1, AFL 2, AFL 3 மற்றும் AFL 4 உள்ளடங்களாக மதுபான உரிமங்களுக்கும் முத்திரைத் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழ், வாகனத்தின் இயந்திரக் கொள்ளளவு, எரிபொருள் வகை மற்றும் வாகனத்தின் வயது என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு வாகனங்களுக்கு காபன் வரியும், நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்கை மீது 7% படுகடன் மீள் கொடுப்பனவு அறவீடும், செல்லிடத் தொலைபேசி கோபுரம் மீது ஆண்டொன்றுக்கு கோபுரம் ஒன்றுக்காக ரூபா 200,000 என்ற விகிதத்தில் செல்லிடத் தொலைபேசி கோபுர அறவீடும், செல்லிடத் தொலைபேசி இயக்குநர்களுக்காக செல்லிடத் தொலைபேசி குறுந்தகவல் சேவை மீதான அறவீடொன்றும், அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், சுற்றுலா அபிவிருத்தி அறவீடு மற்றும் வருடாந்த கம்பனிப் பதிவு அறவீடும் சுற்றுலாத் துறை மற்றும் கம்பனிகளின் வகை என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்டும் அறவீடுகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

அறக்குமதி செய்யப்பட்ட மோட்டர் வாகனங்கள் மீது பொருளாதாரச் சேவைக் கட்டணத்தினை அறவிடுவதற்கான வரி அடிப்படையாக செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையினை ஏற்படுத்துவதற்காக 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதார சேவைக் கட்டணத்திற்கு திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் பயன்வலுப்பெறுகின்ற 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டமானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி நிருவாகத்தினை பலப்படுத்துகிறது. மூன்று அடுக்கு தாபன வருமான கட்டமைப்பினை (14%, 28% மற்றும் 40%), தனியாள் வருமான வரிக் கட்டமைப்பினை ரூபா 500,000 இலிருந்து ரூபா 600,000 இற்கு அதிகரித்தல் மற்றும் உயர் எல்லை வரி விகிதத்தினை 16.0 சதவீதத்திலிருந்து 24.0 சதவீதத்திற்கு அதிகரித்தல் என்பன மேற்குறித்த சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. மேலும், மூலதனக் கொடுப்பனவுக் கட்டமைப்பு மற்றும் நிறுத்தி வைத்தல் வரி விகிதம் என்பனவும் புதிய சட்டத்தின் கீழ் திருத்தியமைக்கப்பட்டன. பிரதான அரசிறை தொடர்பிலான விபரம் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2.1 பிரதான அரசிறை நடவடிக்கைகள் - 2018

| பயன் வலுப் பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வை** | |
| 16.02.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம், (2018.02.15ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2058/33)<br>அரச நிறுவாக சுற்றறிக்கை இல 22/99 இல் குறிப்பிட்டுள்ள பிரகாரம் I, II, III வகை பயன்பெறுனர்களுக்கான உற்பத்தி வரி விலக்கு உச்ச எல்லையை முறையே ரூபா. 22.0 மில்லியன் ரூபா. 16.00 மில்லியன் மற்றும் ரூபா 12.00 மில்லியனாக அதிகரிப்பதற்காக. |
| 16.02.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம், (2018.02.15ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2058 /34)<br>வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல 01/2018 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் பயன்பெறுனர்களுக்கான உற்பத்தி வரி விலக்கு உச்ச எல்லையை ரூபா 5.0 மில்லியனுக்கு அதிகரிப்பதற்காக. |
| 12.04.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.04.12 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2066 / 40)<br>01/2017 ஆம் இலக்க உள்ளுராட்சி மற்றும் மாகாண சபை சுற்றறிக்கையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் பயன்பெறுனர்களுக்கான 2017. நவம்பர் 09 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நாணயக் கடிதம் திறக்கப்பட்ட வாகனங்களுக்கு வரி விடுகையை வழங்குவதற்காக. |
| 24.04.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.04.24 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2068/9)<br>ஜெனரால் (ஓய்வு பெற்ற) ஹமில்டன் வனசிங்கவுக்கு வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காக. |
| 15.05.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.05.15 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2071/16)<br>100 சதவீத வரிச் சலுகையில் இராஜதந்திர/இராஜதந்திர நிறுவனங்களால் பதிவு செய்யப்பட்டதும் இறக்குமதி செய்யப்பட்டதுமான வாகனங்களை விற்பனை செய்வதற்கு.:.அகற்றுவதற்கான வருடாந்த பெறுமானத்தேய்வு வீதத்தை அறிமுகம் செய்வதற்காக. |
| 31.05.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.05.31 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2073/41)<br>மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றுக்கு ரூ. 7.00 என்ற வீதத்தில் உற்பத்தி வரியை விதிப்பதற்காக |
| 09.06.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.06.08 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2074/39)<br>திருத்தப்பட்டவாறான வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல 1/2018 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் பயன்பெறுனர்களுக்கான உற்பத்தி வரி விலக்கை ரூபா 5.0 மில்லியன்களிலிருந்து ரூபா 3.6 மில்லியன்களாக வரி விடுதொகை உச்ச எல்லையை குறைப்பதற்காக |
| 14.06.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.06.14 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2075/51)<br>மண்ணெண்னை தொடர்பில் விதிக்கத்தகு உற்பத்தி வரியை நீக்குவதற்காக |

| பயன் வலுப் பெறும் திகதி | நடவடிக்கைகள் |
| --- | --- |
| 25.07.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம், (2018.07.12 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2079/58)<br>குளிர்பானங்களில் சீனி உள்ளடக்கத்தின் அடிப்படையில் உற்பத்தி வரியினைத் திருத்தம் செய்வதற்காக |
| 17.07.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம், (2018.07.17 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2079/58)<br>இலங்கை சுங்கத்திலிருந்து வாகனங்களை விடுவிப்பதற்கான சலுகை காலம் தொடர்பான நிபந்தனையை நீக்குவதற்கும் செல்லுபடியாகும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் விண்ணப்பதாரிகளுக்கு வசதியளிப்புச் செய்வதற்கு வரி விடுகை நிபந்தனைகள் மற்றும் சட்டங்களை மாற்றம் செய்யாது பதிவு செய்வதற்கு அனுமதிப்பதற்காக |
| 01.08.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.07.31 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2082/10)<br>1000 சி.சி இற்கு குறைவான இயந்திர இயலளவைக் கொண்ட மோட்டார் வாகனங்கள் தொடர்பில் உற்பத்தி வரியை அதிகரிப்பதற்காக. |
| 01.08.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.07.31 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2082 /11)<br>72 மி.மீ. நீளத்திற்கு மேற்பட்ட சிகரேட்டு தொடர்பில் உற்பத்தி வரியை அதிகரிப்பதற்காக. |
| 06.08.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.08.06 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2083/2)<br>2018. ஓகத்து 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நாணயக் கடிதம் தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கு வழங்கப்பட்ட வரிச் சலுகையை வலுப்படுத்துவதற்காக |
| 18.09.2018 | ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம், (2018.09.17 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2089/18)<br>சீனி தொடர்பில் உற்பத்தி வரியை விதிப்பதற்கு |
| 09.10.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.10.08 ஆந் திகதிய,2092/5 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>கொழுப்பமிலங்கள் மீது உற்பத்தி வரியினை விதிப்பதற்காக |
| 02.11.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.11.01 ஆந் திகதிய, 2095/18 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>டீசல் மீதான உற்பத்தித் தீர்வையினைத் திருத்துவதற்காக |
| 12.11.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.11.12 ஆந் திகதிய,2097/3 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>சீனியினை அடிப்படையாகக் கொண்டுள்ள குடிபானங்கள் மீது உற்பத்தித் தீர்வையினை அமுலாக்குவது தொடர்பில் மீள வர்த்தமானி அறிவித்தலினை வெளியிடுவதற்காக |
| 04.12.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.12.03 ஆந் திகதிய,2100/3 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>சீனியினை அடிப்படையாகக் கொண்ட காபனேற்றப்பட்ட குடிபானங்கள் மீதான உற்பத்தித் தீர்வையினைத் திருத்துவதற்காக, |
| **மதுவரிக் (கட்டளைச்) சட்டம்.** | |
| 11.01.2018 | மதுவரி அறிவித்தல் இல. 01/2018 (2018.01.10 ஆம் திகதிய 2053/21 ஆம் இலக்க |

| பயன் வலுப் பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| | அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நிலையங்களின் வியாபார மணித்தியாலங்களை திருத்துவதற்கு |
| 10.01.2018 | மதுவரி அறிவித்தல் இல. 02/2018 (2018.01.10 ஆம் திகதிய 2053/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் )<br>மதுவரி அறிவித்தல் இல. 666 இல் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருத்துவதற்காக |
| 18.01.2018 | மதுவரி அறிவித்தல் இல. 03 / 2018 (2018.01.18 ஆம் திகதிய 2054/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>2018.01.16 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் தாபிக்கப்பட்ட மதுசார அனுமதிப்பத்திரங்களுக்கான வியாபார மணித்தியாலங்களை தொடர்பில் மதுவரி அறிவித்தல் இல 01/2018 இரத்துச் செய்வதற்காக |
| 18.01.2018 | மதுவரி அறிவித்தல் இல. 04/2018 (2018.01.18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>2018.01.16 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் மதுவரி அறிவித்தல் இல. 666 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை திருத்தம் செய்தல் தொடர்பான மதுவரி அறிவித்தல் இல 02/2018 இரத்துச் செய்வதற்காக |
| 22.01.2018 | மதுவரி அறிவித்தல் இல. 05/2018 மற்றும் மதுவரி அறிவித்தல் இல. 06/2018 (2018.01.23 ஆம் திகதிய 2055/09 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>1001 மற்றும் 1002 ஆவது மதுவரி அறிவித்தல் அட்டவணையில் "கூழ்" என்ற சொல்லை நீக்குவதற்கு |
| 21.02.2018 | மதுவரி அறிவித்தல் இல. 07/2018 (2018.02.21 ஆம் திகதிய 2059/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>தொகை கி.கி ஒன்றிற்கு ரூ. 9.00 என்ற விகிதத்தில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட குடிபானமல்லாத ஸ்பிரித்து தொடர்பான மதுவரித் தீர்வையை குறைப்பதற்காக |
| 01.04.2018 | மதுவரி அறிவித்தல் இல. 09/2018 (2018.04.06 ஆம் திகதிய 2065/57 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>கள்ளு போத்தலில் அடைப்பது தொடர்பான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை ரூபா.500,000.00 ஆல் குறைப்பதற்காக |
| 16.04.2018 | மதுவரி அறிவித்தல் இல. 08/2018 (2018.04.09 ஆம் திகதிய 2066/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>திருத்தப்பட்ட மதுவரி அறிவித்தலின் பிரகாரம் கள்ளு வடித்தல் மற்றும் இறக்குதல் தொடர்பில் அனுமதிப்பத்திரத்தை அறிமுகம் செய்வதற்காக |
| 13.06.2018 | மதுவரி அறிவித்தல் இல. 10/2018 (2018.06.13 ஆம் திகதிய 2075/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>07/2018 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலை திருத்துவதற்காக |
| 13.06.2018 | மதுவரி அறிவித்தல் இல. 11/2018 (2018.06.13 ஆம் திகதிய 2075/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>கள்ளுத் தவறணை திறக்கும் மற்றும் மூடும் நேரங்களைதிருத்துவதற்காக |
| 04.10.2018 | மதுவரி அறிவித்தல் 12/2018 (2018.10.03 ஆம் திகதிய 2091/50 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>குடிபானமல்லாத ஸ்பிரித்துக்கள் இறக்குமதியின் பேரில் உற்பத்தித் தீர்வையினைக் செலுத்துவதனை விட்டும் இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகளுக்கு விலக்களிப்புக்களை வழங்குவதற்காக |

| பயன் வலுப் பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு** | |
| 05.04.2018 | 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு), (2018.04.06 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2065 /42)<br>அடையாளங் காணப்பட்ட உயர் தொழில்நுட்ப இயந்திர சாதனங்கள் மற்றும் கருவிகளின் இறக்குமதி தொடர்பாக 2.5 சதவீத து.வி.அ.அ சலுகையை வழங்குவதற்காக. |
| 11.07.2018 | 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தித் தீர்வை (2018.07.11 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2079 /34)<br>அடையாளங் காணப்பட்ட உயர் தொழில்நுட்ப இயந்திர சாதனங்கள் மற்றும் கருவிகளின் இறக்குமதி தொடர்பாக 2.5 சதவீத து.வி.தீ சலுகையை வழங்குவதற்காக. |
| **முத்திரைத் தீர்வை** | |
| 01.10.2018 | 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.10.01 ஆம் திகதிய 2091/3 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>மதுபான உரிமப் பத்திரம் (AFL1, AFL2, AFL3, AFL4)மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற்பனை மீது முத்திரைத் தீர்வையினை அமுல்படுத்துவதற்காக |
| **செஸ் வரி** | |
| 25.07.2018 | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2018.07.24 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2081/10 )<br>தொகையளவில் ஏற்றுமதிசெய்யப்படுகின்ற தேயிலை கி.கி ஒன்றிற்கு ரூபா 10 வீதத்தில் நிலையாக செஸ் வரியினை அறிமுகம் செய்வதற்காக. |
| 26.09.2018 | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2018.09.25 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2090/05)<br>துப்பரவு ஏற்பாட்டு துவாய்களின் இறக்குமதி மீது 30 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ. 300 என்ற வீகிதத்தில் ஏற்புடமையான செஸ் வரியினை மீள் பெயரிடுவதற்காக |
| 17.10.2018 | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2018.10.17 ஆம் திகதிய 2093/19 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>பிடவை மீதான செஸ் வரி வீதத்தினைத் திருத்துவதற்கான கட்டளையினை வெளியிடுவதற்காக |
| **வருமான வரி** | |
| **தாபன வருமான வரி** | |
| 01.04.2018 | மூன்று கட்ட வருமான வரி வீதக் கட்டமைப்பு அறிமுகம் செய்யப்பட்டது.<br>- **நியம சதவீதம் 28%** - நிதிச் சேவைகள், காப்புறுதி, வர்த்தகம், உற்பத்தி, சலுகை / உயர் வரி வகையின் கீழ் வராத வேறு ஏதும்.<br>- **சலுகை வீதம் 14%-** சி.ந.தொ.மு, ஏற்றுமதியாளர்கள், விவசாயம், கல்விச் சேவைகள், சுற்றுலா மேம்பாடுகள், சமூகசேவை நிறுவனம், ஊ.சே.நி, ஊ.ந.நி மற்றும் ஓய்வூதிய நிதியம்.<br>- **உயர் வீதம் 40%-** சூதாட்டம் மற்றும் பந்தயம், புகையிலை மற்றும் மதுசாரம். |
| **தனியாள் வருமான வரி** | |
| 01.04.2018 | **வரிவிதிக்கத்தகு வருமானம் (ரூபா)வரி வீதம்**<br>முதலாவது 600,000 — 4%<br>600,000-1,200,000 — 8%<br>1,200,000-1,800,000 — 12%<br>1,800,000-2,400,000 — 16%<br>2,400,000-3,000,000 — 20% |

| பயன் வலுப் பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| | 3,000,000 மேல் 24% |
| **ஊழிய வருமானம்** | |
| 01.04.2018 | ஊழிய வருமானம் தொடர்பில் 24 மூ சதவீதம் வரி விதிக்கப்படுவதுடன் தனிநபர் ஒருவரின் வரிவிதிதகு வருமானம் தொடர்பில் படிமுறை வரிவிதித்தல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.<br>ரூபா 250,000.00 முதல் ரூபா 700,000.00 வரை தகமை பெறும் கொடுப்பனவு சலுகை அதிகரிக்கப்பட்டுள்ளது.<br>ஓய்வூதிய நன்மைகள் தொடர்பில் வரிச் செயற்பாடுகள் மாற்றமடையாது உள்ளது.<br>இரண்டாம் நிலை ஊழியம்<br>மாதமொன்றுக்கு முதல் 50,000.00 10%<br>மீதிக்கு 20% |
| **மூலதனக் கொடுப்பனவுக் கட்டமைப்பு** | |
| 01.04.2018 | **விபரம்** **புதிய வீதம்**<br>கனணிகள், தரவு கையாளப்படும் உபகரணம் 20%<br>வாகனங்கள் 20%<br>பொறித்தொகுதி, இயந்திரங்கள் 20%<br>கட்டிடங்கள் 05%<br>கட்புலனாகா சொத்துக்கள், நன்மதிப்பு நீங்கலாக மெய் பயன்தரு ஆயட் காலம் அல்லது 5% |
| **நிறுத்தி வைத்தல் வரி** | |
| 01.04.2018 | **வகை** **வீதம்**<br>வங்கி வைப்பிலிருந்தான வட்டி வருமானம் - சிரேட்ட பிரசைகள் 5%(வருடமொன்றுக்கு ரூபா 1.5 மில்லியனுக்கு அதிகமானவை)<br>பிற 5%<br>கூட்டு கடன் பிணைமுறி தொடர்பான வட்டி 5%<br>அரசாங்க பிணைமுறி மீதான வட்டி இல்லை<br>வாடகை 10%<br>குறிப்பிட்ட கட்டணம் - ரூபா 50,000 இற்கு மேற்பட்டவை 5%<br>பங்காண்மை – ஒவ்வொரு பங்காளரினதும் பங்கு மீது 8%<br>தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையினால் ஏல விற்பனையில் இரத்தினக்கல் விற்பனை 25%<br>ஏனைய அனைத்து விடயங்களும் (பங்கிலாபம், இறை முதலியன) 14% |
| **மூலதன ஈட்டு வரி மீதான வரி** | |
| 01.04.2018 | காணி மற்றும் கட்டிடங்களின் கைத்தேறிய பெறுகையின் மீது மற்றும் விலை கூறப்பட்ட பங்குகள் தவிர ஏனைய முதலீட்டுச் சொத்துக்கள் மீது 10 சதவீதத்தினை செல்லுபடியாக்குவதற்காக |
| **முதலீட்டு ஊக்குவிப்பு திட்டம்** | |
| 01.04.2018 | மதிப்பீட்டு ஆண்டின் போது கற்புலனாகும் சொத்துக்கள் தவிர்ந்த பெறுமானத் தேய்வு செய்யத்தகு சொத்துக்கள் மீது செலவு செய்யத ஒருவர் தொடர்பாக மேம்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு கொடுப்பனவின் அடிப்படையில் புதிய முதலீட்டு கொடுப்பனவுத் திட்டத்தினை அறிமுகப்படத்தவதற்காக |
| **காணி ( பாராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டம்.** | |

| பயன் வலுப் பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 30.07.2018 | காணிச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டவர்கள் மீது விதிக்கப்பட்ட மட்டுப்பாடுகள் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியற்படுத்தப்பட்டுள்ள கம்பனிகள் தொடர்பில் நீக்கப்படுவதற்காக<br>4 ஆம் மாடிக்கு கீழ் கொள்வனவு செய்யப்படுகின்ற கூட்டு ஆதன அலகுகள் தொடர்பில் வெளிநாட்டவர்களுக்கான தடைகளை நீக்குவதற்காக |
| **தேச கட்டுமான வரி** | |
| 30.07.2018 | - மதுபானம் மீதான செல்லுபடியாகும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியை நீக்குவதற்காக<br>- மோட்டார்மயப்படுத்தாத உபகரணங்கள் மற்றும் நீர் விளையாட்டுக்கான உதிரப்பாகங்கள் போன்ற குறிப்பிட்ட சேவைகளின் மற்றும் இரத்தினக்கல் பட்டை தீட்டல் மற்றும் மீள் ஏற்றமதி செய்தல் தொடர்பானது வரி விலக்களிப்பதற்காக<br>- 2017 ஓகத்து 01 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையொன்றின் கீழ் வழங்கப்பட்ட நிர்மாணிப்புச் சேவைகளை வரி விலக்களிப்பதற்காக |
| **பெறுமதி சேர் வரி** | |
| 16.08.2018 | - அறை கட்டணங்கள் உள்ளடங்கலாக தனியார் மருத்துவ சேவை வழங்கல் மீது பெ.சே.வரியினை நீக்குவதற்கு அல்லது விலக்களிப்பதற்காக,<br>- நிதிச் சேவைகளின் விநியோகம் மீதான இலங்கை வைப்புக் காப்புறுதி திட்டத்தின் வரிவிலக்களிப்பதற்காக<br>- ஏற்றுமதி நோக்கிய கம்பனிகளின் குறிப்பிட்ட சில ஆடைகளின் உள்நாட்டு விற்பனை மிது விதிக்கத்தகு பெ.சே.வரி வீதத்தின் அடிப்படையான துண்டு வீதத்தைக் குறைப்பதற்காக<br>- குழந்தைப் பால்மா, புத்தகங்கள், சஞ்சிகைகள், ஜேர்னல்கள் அல்லது பருவ வெளியீடு போன்ற குறிப்பிட்ட சில வெளியீடுகளை வரி விலக்களிப்பதற்காக<br>- தாவரங்கள் மற்றும் மலர்கள், புடைவைகள், மரங்கள் மற்றும் மரம் சார்ந்த பொருட்கள், பொறி மற்றும் இயந்திர சாதனங்கள் / கைத்தொழில் இராக்கைகள் உள்ளடங்கலாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதி அல்லது விநியோகம் தொடர்பான பெ.சே.வரி விலக்கினை நீக்குவதற்காக<br>- 2019 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் கூட்டு ஆதன வீடமைப்பு அலகுகளின் விற்பனை வரி விலக்கினை நீக்குவதற்காக<br>- சுற்றுலா பயணிகளுக்கான பெ.சே.வரி மீளளிப்பு திட்டத்தின் அறிமுகப்படுத்துவதற்காக |
| 18.09.2018 | - சீனி இறக்குமதி அல்லது இறக்குமதி மற்றும் விற்பனை மீது ஏற்புடையதான பெ.சே.வ வீதத்தினை 15% இலிருந்து 0% இற்கு குறைப்பதற்காக |
| 01.11.2018 | - இறக்குமதிப் புடவை மீது பெறுமதிசேர் வரி வீதம் விலக்களிப்பதற்காக |
| 01.11.2018 | - அரியப்பட்ட மரப்பலகை இறக்குமதியின் பேரில் ஏற்புடையதான பெறுமதிசேர் வரி வீதத்தினை 5% இற்கு குறைக்கப்பதற்காக |
| **நிதிச் சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டசில வரிகளும் திருத்தியமைக்கப்பட்டன.** | |
| 01.01.2018 | 2018.12.31 அன்று அல்லது அதற்கு முன்னர் நாணயக் கடிதம் திறக்கப்படும் போது வாகன இறக்குமதியாளர்களிடமிருந்து வாகன உரித்து அறவீட்டினை அறவிடுவதற்கும் 2019.01.01 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கின்ற திகதி முதல் இலங்கைச் சுங்கத்தினால் அறவீடுசெய்வதற்காக |

| பயன் வலுப் பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 01.10.2018 | - 2018 ஆம் ஆண்டுக்காக வருடாந்த கம்பனிப் பதிவு அறவீட்டினை விதிப்பதற்காக<br>**கம்பனி வகை** — **வீதம் (ஆண்டொன்றிற்கு ரூபா)**<br>பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனி — 1,500,000<br>தனியார் கம்பனி — 30,000<br>ஏனைய பிற கம்பனி — 250,000 |
| 01.10.2018 | - பெறுமதி சேர்க்கப்பட்ட நிதிச் சேவைகள் வரிக்காக கணிப்பிடப்பட்ட பெறுமதி சேர்கையின் 7% இல் படுகடன் மீள் கொடுப்பனவு அறவீட்டினை அறிமுகப்படுத்துவதறகாக |
| 01.11.2018 | -இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரித் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படவுள்ள மையச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சிகளுக்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக மைய ஏற்பாடுகளைத் திருத்துவதற்காக |
| 01.01.2019 | - வாகனத்தின் இயந்திரக் கொள்வனவினை அடிப்படையாகக் கொண்டு மோட்டார் வாகனங்கள் மீது காபன் வரியினை விதிப்பதற்காக |
| 01.01.2019 | – செல்லிடத் தொலைபேசி இயக்குநர்களிடமிருந்து கோபுரமொன்றுக்கு வருடாந்தம் ரூபா.200,000/- என்ற வீதத்தில் செல்லிடத் தொலைபேசி கோபுர அறவீட்டினை விதிப்பதற்காக, |
| 01.01.2019 | - செல்லிடத் தொலைபேசி குறுஞ்செய்திச் சேவைகள் மீது அறவீடொன்றினை அறிமுகப்படுத்துவதற்காக |
| 01.01.2019 | -சுற்றுலா அபிவிருத்தி அறவீட்டினை அறிமுகப்படுத்துவதற்காக, |
| **பொருளாதார சேவைக் கட்டணம்** | |
| 20.09.2018 | – இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் உற்பத்தி வரி மீதான பொ.சே.க விதிப்பதற்காக,<br>– பொ.சே.க நோக்கத்திற்கு எரிபொருள் விநியோகத்தின் மொத்த விற்பனை செல்லுபடித்தன்மை மொத்த விற்பனையின் பத்தில் ஒரு பங்காக (1/10) இருப்பதற்காக<br>– இலங்கை மத்திய வங்கியின் கைத்தேறாத நாணயமாற்று பயன்களை வரி விலக்களிப்பதற்காக |
| **நிருவாக மாற்றங்கள்** | |
| 28.04.2018 | 12.5 கிலோ கிராம் சிலிண்டர் ஒன்று தொடர்பாக ரூபா 245 வினால் உள்நாட்டு எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டது. |
| 05.05.2018 | பால் மாவின் சில்லறை விலை கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 50 ஆல் அதிகரிக்கப்பட்டது. |
| 30.06.2018 | 12.5 கிலோ கிராம் சிலிண்டர் ஒன்று தொடர்பாக ரூபா 138 வினால் உள்நாட்டு எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டது. |
| 27.09.2018 | 12.5 கிலோ கிராம் சிலிண்டர் ஒன்று தொடர்பாக ரூபா 195 வினால் உள்நாட்டு எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டது. |


## 2.3 அரச வருமானத்தின் போக்கு

### 2.3.1 அரச வருமானம்

அதிகரித்த வருமானத் திரட்டினை அடிப்படையாகக் கொண்ட அரசிறைத் திரட்சிச் செயற்பாட்டினை அரசாங்கம் 2018 ஆம் ஆண்டில் பலப்படுத்தியுள்ளது. அதற்கமைய, மொத்த அரசாங்க வருமானமானது 2017 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற ரூபா 1,832 பில்லியனோடு ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் அது ரூபா 1,920 பில்லியனுக்கு 4.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இது 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வருமான மதிப்பீட்டிலிருந்தான 86.6 சதவீத அதிகரிப்பொன்று காணப்படுகிறது. மொத்த வரி வருமானமும் முன்னைய ஆண்டில் பதிவாக்கிய ரூபா 1,670 பில்லியனோடு ஒப்பிடுகையில் ரூபா 1,712 பில்லியனுக்கு 2.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதேவேளை, விற்பனை மற்றும் அறவீடுகள் இலங்கை மத்திய வங்கியின் இலாப மாற்றல்கள் என்பனவற்றிலிருந்தான அதிகரித்த வருமானம் காரணமாக வரியல்லாத வருமானமும் 2018 ஆம் ஆண்டில் ரூபா 208 பில்லியனுக்கு 28.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரி நிருவாக செயற்பாட்டினை பலப்படுத்துவதோடு இணைந்த வகையில் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி முதல் பயன்வலுப் பெற்ற புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் செயலாக்கத்துடன் ஏற்பட்ட வரி மறுசீரமைப்புக்களிலிருந்து பிரதானமாக பயனடைந்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 310 பில்லியனுக்கு 13.1 சதவீதத்தினால் வருமான வரியிலிருந்தான அரசிறை வருமானம் நேரடி வரிச் சூழலில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. இதேவேளை, செஸ் மற்றும் இறக்குமதித் தீர்வை என்பனவற்றிலிருந்தான வருமானம் நீங்கலாக ஏனைய வருமான மூலங்களில் பதிவாக்கிய அதிகரித்த செயலாற்றுகைகளுடன் 2018 ஆம் ஆண்டில் நேரடியல்லாத வரிவிதிப்பனவின் அதிகரிப்பில் பிரதான வருமான மூலங்கள் என்ற வகையில் உற்பத்தி வரி மற்றும் பெறுமதிசேர் வரி என்பனவற்றிலிருந்தான வருமானம் அதிகரித்துக் காணப்பட்டது.

வரைபு 2.3.1.1 : அரசாங்க வருமானம் 2011-2018




**அட்டவணை 2.3.1.1 மதிப்பிடப்பட்ட, உண்மையான வருமானம் மற்றும் செலவினம் - 2018**

ரூபா.மில்.

| விடயம் | மதிப்பிடப்பட்ட | தற்காலிக | விலகல் |
|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | **2,217,100** | **1,919,973** | **-297,127** |
| **வரி வருமானம்** | **2,034,000** | **1,712,317** | **-321,683** |
| **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்** | | | |
| வருமானம், இலாபம் மீதான வரி | 371,800 | 310,449 | -61,351 |
| பெ.சே.வரி - உள்நாட்டு தேறிய | 340,000 | 282,487 | -57,513 |
| தேசக் கட்டுமான வரி (உள்நாட்டு) | 62,000 | 51,192 | -10,808 |
| **உப மொத்தம்** | **773,800** | **644,128** | **-129,672** |
| **சுங்கத் திணைக்களம்** | | | |
| இறக்குமதித் தீர்வை | 175,000 | 96,991 | -78,009 |
| பெ.சே.வரி - இறக்குமதிகள் (தேறிய) | 210,000 | 179,163 | -30,837 |
| தேசக் கட்டுமான வரி (இறக்குமதி) | 25,000 | 20,165 | -4,835 |
| துறைமுக, விமானநிலைய அறவீடு | 115,000 | 113,950 | -1,050 |
| செஸ் வரி | 49,500 | 53,369 | 3,869 |
| விசேட நுகர்வு அறவீடு மற்றும் ஏனைய | 80,000 | 75,807 | -4,193 |
| உற்பத்தி விசேட ஏற்பாடுகள் | 410,000 | 370,298 | -39,702 |
| சிகரெட்டுகள் | 90,000 | 92,198 | 2,198 |
| பெற்றோலியம் | 80,000 | 66,318 | -13,682 |
| மோட்டார் வாகனங்கள் மற்றும் பிற | 240,000 | 211,782 | -28,218 |
| **உப மொத்தம்** | **1,064,500** | **909,743** | **-154,757** |
| **மதுவரித் திணைக்களம்** | | | |
| மதுபானம் / புகையிலை | 125,040 | 113,989 | -11,051 |
| **உப மொத்தம்** | **125,040** | **113,989** | **-11,051** |
| **ஏனையவை** | **70,660** | **44,457** | **(26,203)** |
| தொலைத்தொடர்பு அறவீடு | 30,000 | 28,326 | -1,674 |
| உரிம வரி மற்றும் பிற | 40,660 | 16,131 | -24,529 |
| **உப மொத்தம்** | **70,660** | **44,457** | **-216,561** |
| **வரியல்லாத வருமானம்** | **183,100** | **207,656** | **24,556** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

**வரைபு 2.3.1.2 : அரசாங்க வருமானம் - 2018**




**அட்டவணை 2.3.1.2- அரசாங்க வருமானம்**

ரூபா.மில்.

| விடயம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 (தற்காலி) |
|---|---|---|---|---|---|---|
| **வரி வருமானம்** | **1,005,895** | **1,050,362** | **1,355,779** | **1,463,689** | **1,670,178** | **1,712,318** |
| வருமான வரி | 205,666 | 198,115 | 262,583 | 258,857 | 274,562 | 310,449 |
| பெ.சே.வரி | 250,523 | 275,350 | 219,700 | 283,470 | 443,739 | 461,651 |
| தே.க.வரி | 40,937 | 44,583 | 45,004 | 57,424 | 69,035 | 71,357 |
| உற்பத்தி வரி | 250,700 | 256,690 | 497,623 | 454,952 | 469,454 | 484,287 |
| இறக்குமதித் தீர்வைகள் | 83,123 | 81,108 | 132,189 | 156,487 | 136,501 | 96,991 |
| துறைமுக,விமானநிலைய அறவீடு | 61,987 | 68,646 | 58,644 | 88,823 | 102,360 | 113,950 |
| விசேட நுகர்வு அறவீடு | 46,705 | 47,953 | 52,276 | 55,825 | 71,402 | 75,807 |
| ஏனையவை | 66,255 | 77,917 | 87,760 | 107,851 | 103,125 | 97,826 |
| **வரியல்லாத வருமானம்** | **131,552** | **144,844** | **99,099** | **222,372** | **161,497** | **207,656** |
| வட்டி/ வாடகை | 11,995 | 13,647 | 7,321 | 15,806 | 11,845 | 13,731 |
| இலாபங்கள்,பங்கிலாபங்கள் | 35,169 | 46,814 | 29,798 | 108,160 | 53,998 | 41,828 |
| விற்பனைகள் மற்றும் அறவீடுகள் | 40,720 | 35,499 | 44,632 | 72,606 | 70,227 | 105,240 |
| சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு | 15,145 | 14,919 | 15,213 | 18,046 | 22,940 | 25,215 |
| மத்திய வங்கி இலாப மாற்றல்கள் | 26,350 | 11,500 | - | 5,000 | - | 15,000 |
| ஏனையவை | 2,173 | 22,466 | 2,135 | 2,754 | 2,486 | 6,642 |
| **மொத்த வருமானம்** | **1,137,447** | **1,195,206** | **1,454,878** | **1,686,061** | **1,831,675** | **1,919,973** |
| **மொ.உ.உற்பத்தி சதவீதத்தில்** | | | | | | |
| **வரி வருமானம்** | **10.5** | **10.1** | **12.4** | **12.3** | **12.6** | **11.9** |
| வருமான வரி | 2.1 | 1.9 | 2.4 | 2.2 | 2.1 | 2.2 |
| பெ.சே.வரி | 2.6 | 2.7 | 2.0 | 2.4 | 3.3 | 3.2 |
| தே.க.வரி | 0.4 | 0.4 | 0.4 | 0.5 | 0.5 | 0.5 |
| உற்பத்தி வரி | 2.6 | 2.5 | 4.5 | 3.8 | 3.5 | 3.4 |
| இறக்குமதித் தீர்வைகள் | 0.9 | 0.8 | 1.2 | 1.3 | 1.0 | 0.7 |
| துறைமுக விமானநிலைய அறவீடு | 0.6 | 0.7 | 0.5 | 0.7 | 0.8 | 0.8 |
| விசேட நுகர்வு அறவீடு | 0.5 | 0.5 | 0.5 | 0.5 | 0.5 | 0.5 |
| ஏனையவை | 0.7 | 0.8 | 0.8 | 0.9 | 0.8 | 0.7 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வரியல்லாத வருமானம்** | **1.4** | **1.4** | **0.9** | **1.9** | **1.2** | **1.4** |
| வட்டி/ வாடகை | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| இலாபங்கள்,பங்கிலாபங்கள் | 0.4 | 0.5 | 0.3 | 0.9 | 0.4 | 0.3 |
| விற்பனைகள் மற்றும் அறவீடுகள் | 0.4 | 0.3 | 0.4 | 0.6 | 0.5 | 0.7 |
| சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு | 0.2 | 0.1 | 0.1 | 0.2 | 0.2 | 0.2 |
| மத்திய வங்கி இலாப மாற்றல்கள் | 0.3 | 0.1 | - | … | - | 0.1 |
| ஏனையவை | … | … | … | … | … | 0.0 |
| **மொத்த வருமானம்** | **11.9** | **11.5** | **13.3** | **14.2** | **13.8** | **13.4** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

*… புறக்கணிக்க முடியுமானவை*

*- தகவல் இல்லை*

**அட்டவணை 2.3.1.3.3 -அரசாங்க வருமானம் - மூல அடிப்படையில்**

ரூபா.மில்

| மூலம் | 2017 | 2018 (தற்காலிக) | 2018/2017 மாற்றம் (%) |
|---|---|---|---|
| **வருமான வரி** | **274,562** | **310,450** | **13.1** |
| நிறுவன மற்றும் நிறுவனமல்லா வரி | 143,588 | 169,672 | 18.2 |
| உ.போ.செலுத்.வரி | 32,920 | 41,385 | 25.7 |
| பொ.சே.க. | 44,720 | 52,979 | 18.5 |
| வட்டி மீதான வரி | 53,334 | 46,414 | (13.0) |
| **உள்நாட்டு நுகர்வு அடிப்படை வரிகள்** | **530,860** | **547,567** | **3.1** |
| பெ.சே.வரி - உள்நாட்டு | 275,367 | 282,487 | 2.6 |
| தே.க.வரி - உள்நாட்டு | 49,716 | 51,192 | 3.0 |
| மதுபானம் மீதான வரி | 113,684 | 113,944 | 0.2 |
| சிகரெட், புகையிலை மீதான வரி | 86,002 | 92,243 | 7.3 |
| ஏனைய (உற்பத்தி) | 6,091 | 7,701 | 26.4 |
| **இறக்குமதி அடிப்படை வரிகள்** | **821,253** | **809,844** | **(1.4)** |
| இறக்குமதி வரிகள் | 136,501 | 96,991 | (28.9) |
| பெ.சே.வரி -இறக்குமதி | 168,393 | 179,163 | 6.4 |
| தே.க.வரி -இறக்குமதி | 19,320 | 20,165 | 4.4 |
| து.வி.நி.அபிவிருத்தி அறவீடு | 102,360 | 113,950 | 11.3 |
| வி.வி.பண்ட அறவீடு | 71,402 | 75,807 | 6.2 |
| செஸ் அறவீடு | 59,554 | 53,369 | (10.4) |
| பெற்றோலியம் உற்பத்தி | 73,983 | 66,318 | (10.4) |
| மோட்டார் வாகனங்கள் உற்பத்தி | 189,740 | 204,081 | 7.6 |
| **உரிமம் மற்றும் ஏனையவை** | **43,504** | **44,457** | **2.2** |
| தொலைத்தொடர்பு அறவீடு | 33,399 | 28,326 | (15.2) |
| ஏனையவை | 10,105 | 16,131 | 59.6 |
| **மொத்த வரி வருமானம்** | **1,670,178** | **1,712,318** | **2.5** |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*


### 2.3.2 வரி வருமானம்

வரி அடிப்படையினை விரிவுபடுத்தியமை காரணமாக 2018 ஆம் ஆண்டில் வரி வருமானமானது ரூபா 1,712 பில்லியனுக்கு 2.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. ஒட்டோ டீசல் மீது வழங்கப்பட்ட தீர்வை விலக்களிப்புக் காரணமாக 2018 ஆம் ஆண்டில் பெற்றோலியப் பொருட்கள் மீதான உற்பத்தி வரியிலிருந்து திரட்டப்பட்ட வரி வருமானமானது வீழ்ச்சியடைந்துள்ளது.

**வருமான வரி** : தாபன மற்றும் தாபனமல்லாத வரி, உழைக்கும் போது செலுத்தும் வரி, பொருளாதார சேவைக் கட்டணம், வட்டி வருமானம் மீதான நிறுத்தி வைத்தல் வரி மற்றும் மூலதன ஈட்டு வரி என்பனவற்றினை உள்ளடக்கிய வருமான வரியிலிருந்து திரட்டப்பட்ட மொத்த அரசிறை வருமானமானது 2017 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 274.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 310.5 பில்லியனுக்கு 13.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

அரச மற்றும் தனியார் துறை போன்ற இரண்டு துறைகளிலும் சம்பளங்களில் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்து,2017 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 32.9 பில்லியனோடு ஒப்பிடுகையில் உழைக்கும் போது செலுத்தும் வரியிலிருந்தான வருமானமானது 2018 ஆம் ஆண்டில் ரூபா 41.4 பில்லியனுக்கு 25.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், வட்டி வருமானம் மீதான வரியிலிருந்தான வருமானமானது 2017 ஆம் ஆண்டில் ரூபா 53.3 பில்லியனாகக் காணப்படுவதோடு இது 2018 ஆம் ஆண்டில் ரூபா 46.4 பில்லியனுக்கு 13 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு ஒப்பீட்டு ரீதியில் அரசாங்க பிணையங்கள் விநியோகத்தில் ஏற்பட்ட பின்னடைவே காரணமாய் அமைந்தது. அதற்கமைய 2018 ஆம் ஆண்டுக்காக வருமான வரி வருமானமானது ரூபா 372 பில்லியனாக மதிப்பிடப்பட்ட போதிலும் அதில் ரூபா 310.5 பில்லியன் 2018 ஆம் ஆண்டில் அடையப்பெற்றிருந்தது.

**வரைபு 2.3.2.1 : நேரடி வரிகள் 2011 - 2018**



**அட்டவணை2.3.2.1-வருமான வரி செயலாற்றுகை**


ரூபா.மில்

| விடயம் | 2016 | 2017 (தற்காலிக) | 2018 | வளர்ச்சி % |
|---|---|---|---|---|
| **மொத்த வருமான வரி** | **258,857** | **274,562** | **310,449** | **13.1** |
| நிறுவன மற்றும் நிறுவனமல்லாத* | 154,324 | 143,588 | 169,672 | 18.2 |
| உ.போ.செ.வரி | 28,169 | 32,920 | 41,385 | 25.7 |
| பொ.சே.கட்டணம் | 20,458 | 44,720 | 52,979 | 18.5 |
| வட்டி மீதான வரி | 55,906 | 53,334 | 46,414 | **-13.0** |

** ரூபா 104 மில்லியன் மூலதன ஈட்டு வரி உள்ளடங்கலாக*

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

**வரைபு 2.3.2.2 : வருமான வரி செயலாற்றுகை**




**பெறுமதிசேர் வரி**

மொத்த அடிப்படையில், பெறுமதிசேர் வரியிலிருந்து திரட்டப்பட்ட வருமானமானது, 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டில் ரூபா 461.6 பில்லியனுக்கு 4.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2018 ஆம்ஆண்டுக்காக மதிப்பிடப்பட்ட மொத்த பெறுமதிசேர் வரி வருமானமானது ரூபா 550 பில்லியனாகும். உள்நாட்டுச் செயற்பாடுகள் மீதான பெறுமதிசேர் வரி வருமானமானது ரூபா 282.5 பில்லியனுக்கு 2.6 சதவீதத்தினால் அதிகரித்ததோடு இறக்குமதிகள் மீதான பெறுமதிசேர் வரி வருமானமானது முழு ஆண்டிலும் ரூபா 179 பில்லியனுக்கு 6.4 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. பிடவைகள், பலகை, வானூர்திகள் மற்றும் அதன் பாகங்கள், புகைப்படக் கருவிகள் மற்றும் புரொஜெக்டர்கள் போன்ற தெரிவு செய்யப்பட்ட பொருட்கள் மீதான விலக்களிப்புக்கள் நீக்கப்பட்டமையும் சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளுக்காக விலக்களிப்புக்கள் வழங்கப்பட்டமையுமே இச்செயலாற்றுகைக்கு பங்களிப்புச் செய்துள்ளது.


**அட்டவணை2.3.2.2-பெறுமதிசேர் வரி வருமானம்**

ரூபா.மில்

| விடயம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 (தற்காலிக) |
|---|---|---|---|---|---|---|
| உள்நாட்டு | 124,658 | 140,413 | 131,662 | 168,817 | 276,046 | 283,330 |
| இறக்குமதிகள் | 126,538 | 136,221 | 89,174 | 115,339 | 168,393 | 179,123 |
| **மொத்த வருமானம்** | **251,196** | **276,634** | **220,836** | **284,156** | **444,438** | **462,453** |
| மீள் கொடுப்பனவுகள் | 439 | 1,284 | 1,136 | 686 | 679 | 831 |
| **தேறிய வருமானம்** | **250,757** | **275,350** | **219,700** | **283,470** | **443,760** | **461,622** |
| **மொ.உ.உ % இல் தேறிய வருமானம்** | **2.6** | **2.7** | **2.0** | **2.4** | **3.3** | **3.2** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

**வரைபு 2.3.2.3 : நேரடியல்லாத வரிகள் 2011-2018**




**துறைமுக, விமானநிலைய** : துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து திரட்டப்பட்ட வருமானமானது 2017 ஆம் ஆண்டில் ரூபா 102.4 பில்லியனாக காணப்பட்டதோடு இது 2018 ஆம் ஆண்டில் ரூபா 114 பில்லியனுக்கு 11.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதேவேளை, 2018 ஆம் ஆண்டுக்காக மதிப்பிடப்பட்ட மொத்த துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடானது ரூபா 115 பில்லியனாகும்.

**உற்பத்தித் தீர்வை** :மோட்டார் வாகனங்களிலிருந்தான அதிகரித்த வருமானத் திரட்டினால் ஆதரவளிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 469.5 பில்லியனோடு ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 484.3 பில்லியனுக்கு 3.1 சதவீதத்தினால் உற்பத்தித் தீர்வையிலிருந்து திரட்டப்பட்ட வருமானம் அதிகரித்துள்ளது. மேலும், மதுபானத்திலிருந்து திரட்டப்பட்ட சருமானம் 2018 ஆம் ஆண்டில் சிறிதளவு அதிகரித்துள்ளது. இத்துறையானது நடுத்தர அளவிலான செயலாற்றுகையினை பதிவு செய்த போதிலும், உற்பத்தித் தீர்வையிலிருந்து திரட்டப்பட்ட வருமானமானது 2018 ஆம் ஆண்டில் மொத்த வரி வருமானத்திற்கு 28.3 சதவீதத்திற்கு வகைகூறி நிலைத்திருக்கிறது.

புரூப் லீற்றரிலிருந்து செறிவினை அடிப்படையாகக் கொண்ட வரிக்கு வன் மற்றும் மாவூறல் மதுபானங்களின் வரி அடிப்படை திருத்தியமைக்கப்பட்டதன் விளைவாக 2017 ஆம் ஆண்டின் ரூபா 113.7 பில்லியனிலிருந்து 2018 ஆம் ஆண்டில் 113.9 பில்லியனுக்கு 0.2 சதவீதத்தினால் மதுபான உற்பத்திகளிலிருந்தான மதுவரித் தீர்வை வருமானமானது சற்று அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும்,

மாவூறல் மதுபானம் மற்றும் வன் மதுபானம் என்பனவற்றின் மீதான மதுவரித் தீர்வை விகிதங்களை குறைத்ததன் காரணமாக மாவூறல் மதுபான உற்பத்தியானது 121 மில்லியன் புறாப் லீற்றர்களுக்கு 72 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதோடு வன்மதுபான உற்பத்தியும் 25.3 மில்லியன் சுத்த லீற்றர்களுக்கு 11.2 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டுக்காக மதுபானம் மற்றும் சிகரெட்டு உற்பத்திகள் மீதான மதிப்பிடப்பட்ட உற்பத்தித் தீர்வையானது ரூபா 215 பில்லியனாகக் காணப்பட்டதோடு இதில் ரூபா 206.2 பில்லியன் மீளாய்வாண்டில் அடையப்பெற்றுள்ளது. புகையிலை மற்றும் மதுபானப் பொருட்களின் நுகர்வினைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் மேற்கொண்ட கொள்கைசார் நடவடிக்கைகளின் விளைவே இதற்கு முக்கிய காரணமாகும்.


மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி வரி வருமானமானது 2017 ஆம் ஆண்டில் அடையப்பெற்றரூபா 189.7 பில்லியனோடு ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 204.1 பில்லியனுக்கு 7.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மோட்டார் வாகன இறக்குமதியினைப் பொறுத்த வரையிலும் 460,261 மோட்டார் வானகங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதோடு இது 2018 ஆம் ஆண்டில் 494,488 மோட்டார் வாகனங்களாக 7.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்துடன் இணைந்த வகையில் உற்பத்தித் தீர்வையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் விளைவாக ஏற்பட்ட அதிகரித்த மோட்டார் வாகன இறக்குமதி காரணமாக 2018 ஆம் ஆண்டில் மோட்டார் வாகனங்களிலிருந்து திரட்டப்பட்ட உற்பத்தி வரி வருமானமும் அதிகரித்துள்ளது. மோட்டார் வாகனங்களிலிருந்தான உற்பத்தி வரி வருமானமானது மதிப்பிடப்பட்ட ரூபா 230 பில்லியன் பெறுமதியிலிருந்து வீழ்ச்சியடைந்துள்ளது. எவ்வாறாயினும், மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 88.7 சதவீதமான பெறுமதி 2018 ஆம் ஆண்டில் அடையப்பெற்றுள்ளது.

இதேவேளை, காபனேற்றப்பட்டுள்ள குடிபானங்கள் கொண்டுள்ள சீனி உள்ளடக்கத்தின் மீது 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் பயன்வலுப்பெறும் வகையில் உற்பத்தித் தீர்வை விதிக்கப்பட்டது. ஆரோக்கியமற்ற நுகர்வுப் பழக்கவழக்கங்களைக் கட்டுப்படுத்துவதே இதன் நோக்கமாகும். இதேவேளை, பிலாஸ்திரிக் பொருட்கள் மற்றும் பிலாஸ்திரிக் பாவனை என்பனவற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் பிளாஸ்திரிக் ரெசின் மீதும் உற்பத்தித் தீர்வை விதிக்கப்பட்டது.


சிகரெட்டு மற்றும் புகையிலை என்பனவற்றிலிருந்து திரட்டப்பட்ட வருமானத்தினை 2017 ஆம் ஆண்டின் ரூபா 86 பில்லியனோடு ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டில் 92.2 பில்லியனுக்கு 7.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. சிகரெட்டு நுகர்வானது 2018 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 3,150 மில்லியன் கூறுகளாக நிலையான பெறுமதியில் காணப்படுகிறது.

பெற்றோலிய உற்பத்திகளிலிருந்து திரட்டப்பட்ட வருமானத்தினை 2017 ஆம் ஆண்டில் பதிவாக்கிய 74.0 பில்லியனோடு ஒப்பிடுகையில் அது 2018 ஆம் ஆண்டில் 66.3 பில்லியனுக்கு 10.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

**வரைபு 2.3.2.4 : சிகரெட் உற்பத்தி மற்றும் உற்பத்தி வரி வருமானம்**




**வரைபு 2.3.2.5 : மதுபான உற்பத்தி, மதுவரி வருமானம்**




*குறிப்பு: 2016 ஆம் ஆண்டின் பின்னர் வன்மதுபான உற்பத்தியானது நிகர நிறையில் கணிக்கபடுகிறது.*
*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்கள், மதுவரித் திணைக்களம்*

**அட்டவணை 2.3.2.3 : மதுபானம், சிகரெட்டுகளிலிருந்து உற்பத்தி, மதுவரி சேகரிப்பு**

| ஆண்டு | உற்பத்தி செய்யப்பட்ட அளவு | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வன் மதுபானம் (லீற்றர் மில்.) | % மாற்றம் | பாகு மதுபானம் (லீற்றர் மில்.) | % மாற்றம் | சிகரெட் (லீற்றர் மில்.) | % மாற்றம் | மதுபானம் (லீற்றர் பில்.) | % மாற்றம் | சிகரெட் (லீற்றர் பில்.) | % மாற்றம் |
| 2011 | 53.8 | 8.9 | 87.5 | 22.5 | 4,469 | 4.3 | 55.8 | 48.0 | 49.6 | 22.2 |
| 2012 | 49.7 | -7.6 | 99.3 | 13.5 | 4,320 | -3.3 | 60.1 | 7.7 | 53.9 | 8.7 |
| 2013 | 44.2 | -11.1 | 120.2 | 21.0 | 4,035 | -6.6 | 66.0 | 9.8 | 58.6 | 8.7 |
| 2014 | 43.9 | -0.6 | 124.5 | 3.6 | 3,777 | -6.4 | 69.1 | 4.6 | 57.2 | -2.3 |
| 2015 | 51.8 | 17.9 | 125.8 | 1.0 | 4,116 | 9.0 | 105.2 | 52.3 | 80.0 | 39.9 |
| 2016 | 55.6 | 7.3 | 52.2 | (58.5) | 3,789 | -7.9 | 120.2 | 14.3 | 88.8 | 11.0 |
| 2017 | 46.9 | -15.5 | 71.1 | 36.3 | 3,149 | -16.9 | 113.7 | -5.4 | 86.0 | -3.2 |
| 2018 | 44.4 | -5.4 | 121.1 | 70.4 | 3,150 | 0.0 | 113.9 | 0.2 | 92.2 | 7.2 |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம்*

**அட்டவணை 2.3.2.4 : மோட்டார் வாகன இறக்குமதி**


| விடயம் | மோட்டார் வாகனங்களின் எண் | | | | % மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 | 2015 | 2016 | 2017 | 2018 |
| மோட்டார் சைக்கிள்கள் | 349,441 | 329,978 | 364,346 | 354,998 | 8.4 | -5.6 | 10.4 | -2.6 |
| முச்சக்கர வண்டிகள் | 132,865 | 47,976 | 19,021 | 20,782 | 59.6 | -63.9 | -60.4 | 9.3 |
| டிரெக்டெர்கள் | 14,233 | 13,185 | 10,295 | 6,992 | 158.3 | -7.4 | -21.9 | -32.1 |
| போக்குவரத்து வாகனங்கள் | 44,218 | 32,161 | 25,964 | 25,077 | 72.3 | -27.3 | -19.3 | -3.4 |
| பயணிகள் வான்கள், பேரூந்துகள் | 4,687 | 2,849 | 3,732 | 2,581 | 20.0 | -39.2 | 31.0 | -30.8 |
| மோட்டார் கார்கள் | 108,866 | 42,208 | 36,131 | 83,269 | 165.3 | -61.2 | -14.4 | 130.5 |
| ஏனைய | 510 | 948 | 772 | 789 | 26.9 | 85.9 | -18.6 | 2.2 |
| **மொத்தம்** | **654,820** | **469,305** | **460,261** | **494,488** | **35.9** | **-28.3** | **-1.9** | 7.4 |

*மூலம்: இலங்கை சுங்க திணைக்களம்*

**இறக்குமதித் தீர்வை :**இறக்குமதித் தீர்வையிலிருந்து திரட்டப்பட்ட வருமானமானது 2018 ஆம் ஆண்டில் 96.9 பில்லியனுக்கு 28.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது ரூபா 39 பில்லியனுக்கு கிட்டியதாகக் காணப்பட்டதோடு அதன் மூலம் 2018 ஆம் ஆண்டுக்காக மதிப்பிடப்பட்ட ரூபா 175 பில்லியன் இறக்குமதித் தீர்வை வருமானத்தின் 55.4 சதவீதத்தினை மாத்திரமே குறித்த ஆண்டில் அடைந்து கொள்வதற்கு முடியுமாக அமைந்திருந்தது. பெற்றோல் மற்றும் டீசல் என்பனவற்றின் மீது வழங்கப்பட்ட தீர்வைப் பிற்போடல்கள் மற்றும் பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன இறக்குமதித் தீர்வையிலிருந்தான வருமானம் வீழ்ச்சியடைவதற்கு காரணமாய் அமைந்தன.

**விசேட வியாபாரப் பண்ட அறவீடு :**உள்நாட்டு உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கும் பருவமல்லாத காலங்களில் ஏற்படுகின்ற விலைத் தலம்பல்களிலிருந்து நுகர்வோர்களைப் பாதுகாப்பதற்குமாக, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் விசேட வியாபாரப் பண்டமென அத்தியவசிப் பொருட்களின் பட்டியலொன்று 2017 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்து அடையப்பெற்ற வருமானமும் 2017 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற 71.4 பில்லியனிலிருந்து 2018 ஆம் ஆண்டில் 75.8 பில்லியனுக்கு 6.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்து அடையப்பெற்ற வருமானமானது குறித்த ஆண்டுக்காக மதிப்பிடப்பட்ட 80 பில்லியனுக்கு கிட்டியதாக 5 பில்லியனினால் குறைந்து காணப்படுகின்றது. பளிங்கு நிற மற்றும் கபில நிற சீனி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்தான வருமானமானது சீனி இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் பளிங்கு நிற மற்றும் கபில நிற சீனி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன காரணமாக 2018 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. இதேவேளை, பெரிய வெங்காய இறக்குமதி மீது குறைந்தளவிலான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு விகதங்கள் காரணமாக பெரிய வெங்காயத்திலிருந்தான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு வருமானமும் கணிசமானளவு குறைவடைந்துள்ளது.

**வரைபு 2.3.2.6 : இறக்குமதி, ஏற்றுமதி வரிகள்**




**அட்டவணை 2.3.2.5 - விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு வீதங்கள்**

கி.கி. ஒன்றுக்கு ரூபா

| | விபரம் | திசம்பர் இறுதியில் 2017 | திசம்பர் இறுதியில் 2018 |
|---|---|---|---|
| 1 | நெத்தலி | 1 | 1 |
| 2 | உருளைக் கிழங்கு | 1 | 20 |
| 3 | சிறிய வெங்காயம் | 25 | 25 |
| 4 | பெரிய வெங்காயம் | 1 | 20 |
| 5 | வெள்ளைப்பூடு | 40 | 40 |
| 6 | பாசிப் பயறு | 40 | 40 |
| 7 | பருப்பு - முழுமை | 1 | 2 |
| | உடைக்கப்பட்டவை | 3 | 7 |
| 8 | மிளகாய் - அரைக்க/ நொறுக்கப்படாதவை | 25 | 25 |
| | அரைக்க/ நொறுக்கப்பட்டவை | 125 | 125 |
| 9 | தகரத்திலடைத்த மீன் | 50 | 50 |
| 10 | சீனி - பளிங்கு | 31 | 32 |
| | - மெருதுவற்ற/ பளுப்பு நிற | 33 | 35 |
| 11 | வட்டாணா - முழுமையானது | 15 | 5 |
| | உடைக்கப்பட்டவை | 18 | 8 |
| 12 | கொண்டைக் கடலை - முழுமையானவை | 7 | 2 |
| | உடைக்கப்பட்டவை | 10 | 5 |
| 13 | உழுந்து | 60 | 125 |
| 14 | கௌப்பி | 70 | 70 |
| 15 | திணை/ பிற | 70 | 70 |
| 16 | மாசிக் கருவாடு | 102 | 102 |
| 17 | கருவாடு | 52 | 52 |
| 18 | தோடம்பழம் - புதியது | 65 | 65 |
| 19 | திராட்சை - புதியது | 130 | 130 |
| 20 | அப்பிள் - புதியது | 45 | 45 |
| 21 | கொத்தமல்லி விதைகள் - நொறுக்கப்படாதவை / அரைக்கப்படாதவை | 26 | 26 |
| | கொத்தமல்லி விதைகள் - நொறுக்கப்பட்டவை | 52 | 52 |

**அட்டவணை 2.3.2.5 - விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு வீதங்கள்**

கி.கி. ஒன்றுக்கு ரூபா

| | விபரம் | திசம்பர் இறுதியில் 2017 | திசம்பர் இறுதியில் 2018 |
|---|---|---|---|
| | / அரைக்கப்பட்டவை | | |
| 22 | சீரகம் | 162 | 162 |
| 23 | பெருஞ்சீரகம் | 162 | 162 |
| 24 | மஞ்சள் அரைக்கப்படாத/நொருக்கப்படாதவை | 102 | 102 |
| | மஞ்சள் - ஏனையவை | 360 | 360 |
| 25 | மாத்தை - விதை | 50 | 50 |
| 26 | குரக்கன் | 70 | 70 |
| | குரக்கன் மா | 150 | 150 |
| 27 | உழுந்து மா | 200 | 200 |
| 28 | நிலக்கடலை- தேலுடன் கூடியவை | 112 | 112 |
| 29 | கடுகு | 62 | 62 |
| 30 | பாம் எண்ணெய்/ தாவர எண்ணெய் - சுத்தீகரிக்கப்படாதவை | 110 | 150 |
| | பாம் எண்ணெய்/ தாவர எண்ணெய் - சுத்தீகரிக்கப்பட்டவை | 135 | 170 |
| | பாம் கேர்னல் - சுத்தீகரிக்கப்படாதவை | 130 | 170 |
| | பாம் கேர்னல் - சுத்தீகரிக்கப்பட்டவை | 145 | 185 |
| | பாம் ஒலேன் | 115 | 155 |
| | சுத்திகரிக்கப்பட்ட பாம் எண்ணெய் | 135 | 175 |
| | தேங்கபய் எண்ணெய ் (சுத்திகரிக்கப்பட்ட/ சுத்திகரிக்கப்படாத | 130 | 150 |
| 31 | மீன்* | 10% அல்லது ரூபா 100 | 10% அல்லது ரூபா 100 |
| 32 | மேகரல் | 6 | 6 |
| 33 | யோகட் | 625 | 625 |
| 34 | வெண்ணெய் | 880 | 880 |
| 35 | மாஜரீன் (அதிகம்) 80மூ கொழுப்பு | 215 | 215 |
| | மாஜரீன் - ஏனைய | 315 | 315 |
| 36 | உப்பு | 40 | 40 |
| 37 | பேரீச்சம் பழம் | 60 | 60 |
| 38 | உலர் திராட்சை | 230 | 230 |
| 39 | மங்குஸ்தான் | 200 | 200 |
| 40 | உலர்த்தப்பட்ட தோடம்பழம் | 200 | 200 |
| 41 | பியார்ஸ் | 175 | 175 |
| 42 | செரிப் பழம் | 250 | 250 |
| 43 | முந்திரிகை மற்றும் சுலோகம் | 200 | 200 |
| 44 | கிவிப்பழம் | 175 | 175 |
| 45 | மாதுளம்பழம் (மற்றையவை) | 200 | 200 |
| 46 | அரைக்கக்/துளாக்கப்பட்ட சீஸ் | | 200 |
| 47 | சோளம் | 10 | 10 |
| 48 | அரிசி (சம்பா அரிசி, பச்சை அரிசி, தவிட்டு அரிசி,உடைக்கப்பட்ட அரிசி) | 0.25 | - |
| 49 | தேங்காய் எண்ணெய் | 1 | - |

*வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டது*

* 2017.12.14 ஆம் திகதி முதல் தலப்பத், கொப்பரா மற்றும் தோரா இன மீன்களுக்கு கி.கி ஒன்றுக்கு ரூபா25 விகித தீர்வை

**தேச கட்டுமான வரி :**தேச கட்டுமான வரியிலிருந்தான மொத்த வரி வருமானமானது 2017 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 69.0 பில்லியனோடு ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் இது 71.4 பில்லியனுக்கு அதிகரித்துக் காணப்பட்டது. உள்நாட்டுச் செயற்பாடுகள் மீது தேச கட்டுமான வரியிலிருந்து திரட்டப்பட்ட வருமானமானது ரூபா 51.2 பில்லியனுக்கு 3.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதோடு இறக்குமதிகள் மீது தேச கட்டுமான வரியிலிருந்தான வருமானமும் 2018 ரூபா 20.2 பில்லியனுக்கு 4.4 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்துள்ளது. நிர்மாண ஒப்பந்தக்காரர்கள், அடுக்குத்தொடர் மாடிகள் விற்பனை, வங்கிக் கணக்கு ஒன்றின் மூலம் வெளிநாட்டு நாணய அலகில் பெறப்பட்ட உள்நாட்டு பிரயாண முகவர்களின் சேவைகள் மீதான விலக்களிப்புக்களை நீக்குவதற்காக எடுக்கப்பட்ட கொள்கைசார் நடவடிக்கைகள் தேச கட்டுமான வரியிலிருந்து திரட்டப்பட்ட வருமான அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் ரூபா 35.7 பில்லியன் தேச கட்டுமான வரி மூலம் பெறப்பட்ட வருமானம் வரி வருமானத்தினை இலகுபடுத்துவதன் ஒரு பகுதி 2011 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வருமானம் பகிர்வு முறைமையின் கீழ் மாகாண சபைகளுக்கு மாற்றல் செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டுக்காக தேச கட்டுமான வரியிலிருந்து மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 87 பில்லியனாகும்.

**அட்டவணை 2.3.2.6-தே.க.வரி வருமாணம் மாகாண சபைகளுக்கான மாற்றல் - 2018**

| மாகாண சபைககள் | வருமானம் (ரூ.மில்.) | மொத்தம் % |
|---|---|---|
| மேல் மாகாணம் | 17,126 | 48 |
| மத்திய மாகாணம் | 3,211 | 9 |
| தென் மாகாணம் | 3,211 | 9 |
| வடமேல் மாகாணம் | 3,211 | 9 |
| சப்பிரகமுவ மாகாணம் | 1,784 | 5 |
| வடமத்திய மாகாணம் | 1,784 | 5 |
| ஊவா மாகாணம் | 1,784 | 5 |
| மேல் மாகாணம் | 1,784 | 5 |
| மேல் மாகாணம் | 1,784 | 5 |
| **மொத்தம்** | **35,679** | **100** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

**செஸ் அறவீடு :** 2018 ஆம் ஆண்டில் மொத்த வரி வருமானத்தின் 3.1 சதவீதத்திற்கு வகை கூறிய மொத்த செஸ் வரி வருமானமானது 2017 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற ரூபா 59.55 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 53.37 பில்லியனுக்கு 10.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இறைச்சி, பாற்பொருட்கள், திராட்சை, பெயார்ஸ், பியர் மற்றும் வைன் போன்ற அடையாளங் காணப்பட்ட 253 பொருட்கள் மீது ஏற்புடையதான செஸ் வரி நீக்கத்தினை பிரதிபலித்து 2018 ஆம் ஆண்டில் ரூபா 50.78 பில்லியனுக்கு 10.24 சதவீதத்தினால் இறக்குமதிகள் மீதான செஸ் வரியிலிருந்தான வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் ஏற்றுமதிகளிலிருந்தான செஸ் வருமானமானது விவசாய, கைத்தொழில் மற்றும் கனிப்பொருட்கள் என்பவற்றின் ஏற்றுமதியில் வீழ்ச்சி காரணமாக ரூபா 2.6 பில்லியனுக்கு 10.35 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும் 2018 ஆம் ஆண்டுக்காக மதிப்பிடப்பட்ட செஸ் வருமானமானது ரூபா 49.50 பில்லியனாகக் காணப்பட்டதோடு அதில் ரூபா 53.37 பில்லியன் அடையப் பெற்றிருந்தது.

**அட்டவணை2.3.2.7- சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம் மற்றும் விவசாயத்துறை அபிவிருத்திக்கான அரசாங்க மானியம் 2016-2018**

ரூபா.மில்

| விபரம் | 2016 | 2017 | 2018 | விபரம் | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதிகள் மீதான செஸ்வரி** | **2,672** | **2,980** | **2,592** | வர்த்தகப் பயிர் அபிவிருத்தி | | | |
| தேயிலை- தேயிலை (வரியும் ஏற்றுமதிக் கட்டுப்பாடும்) இலங்கை தேயிலைச் சபைச் சட்டம் என்பவற்றின் கீழ் | 587 | 550 | 591 | தேயிலை | 549 | 445 | 615 |
| இறப்பர்- இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தின் கீழ் | 10 | 90 | 10 | இறப்பர் | 713 | 703 | 579 |
| தெங்கு- தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் | 141 | 105 | 107 | தெங்கு | 709 | 598 | 653 |
| ஏஅச செஸ்- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் | 1,832 | 2,235 | 1,884 | மரமுந்திரிகை | 40 | 54 | 67 |
| **இறக்குமதிகள் மீதான செஸ் வரி** | | | | சிறு ஏற்றுமதிப் பயிர்கள் (கறுவா,கொக்கோ, கோப்பி.மிளகு) | 380 | 346 | 440 |
| இறக்குமதிகள் - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் | 59,058 | 56,574 | 50,777 | மொத்த விவசாயத்துறை அபிவிருத்திக்கான உர மானியம் | 27,771 | 30,361 | 26,879 |
| **மொத்தம்** | **61,730** | **59,554** | **53,369** | **மொத்தம்** | **30,162** | **32,507** | **29,233** |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்*

*(அ) தற்காலிகமானது*


**தொலைத் தொடர்பு அறவீடு:**தொலைத் தொடர்பு அறவீட்டின் மூலம் திரட்டப்பட்ட வருமானமானது 2017 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற ரூபா 33.4 பில்லியனோடு ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 28.3 பில்லியனுக்கு 15.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அழைப்புக் கால எல்லையில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இணைந்த வகையில் இணைய சேவைகளுக்கான வரிகள் நீக்கப்பட்டமையே இதற்கு காரணமாய் அமைந்தது.

### 2.3.3வரியல்லாத வருமானம்

2017 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 161.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 207.6 இற்கு வரியல்லாத வருமானம் 28.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இலாபம் மற்றும் பங்கிலாபங்கள் நீங்கலாக ஏனைய அனைத்து உப துறைகளிலிருந்துமான அதிகரித்த வருமானம் இதற்கு பிரதான பங்களிப்புச் செய்துள்ளது. வாடகை வருமானம் ரூபா 5.6 பில்லியனுக்கு 25.6 சதவீதத்தினாலும் சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புக்கள் ரூபா 25.2 பில்லியனுக்கு 9.9 சதவீதத்தினாலும் வட்டி வருமானம் 8.2 பில்லியனுக்கு 10.3 சதவீதத்தினாலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் அதிகரித்ததன் விளைவாக வரியல்லாத வருமானமும் அதிகரித்துள்ளது. மேலும், விற்பனை மற்றும் அறவீடு என்பவற்றிலிருந்தான வரியல்லாத வருமானத்தினை 2017 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 66.6

பில்லியனோடு ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 105.2 பில்லியனுக்கு 58.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், அரச தொழில் முயற்சிகளிலிருந்தான இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் என்பவை 2017 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 54.0 பில்லியனோடு ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 41.8 பில்லியனுக்கு 22.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இது தவிர, 2018 ஆம் அரசிறையாண்டுக்காக இலங்கை மத்திய வங்கியின் ரூபா 15.0 பில்லியன் இலாப மாற்றல்கள் காரணமாக 2018 ஆம் ஆண்டில் அதிகரித்த வரியல்லாத வருமானத்திற்குப் பங்களிப்புச் செய்துள்ளது. அதன் பிரகாரம், 2018 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட வரியல்லாத வருமானம் ரூபா 183.1 பில்லியனாகக் காணப்பட்டதோடு மெய் வருமானத்திலிருந்தான விலகலானது விற்பனைகள் மற்றும் அறவீடுகளிலிருந்தான வருமானத்தில் ஏற்பட்ட விரிவாக்கம் இதற்கு காரணமாக அமைந்துள்ளது.

**வரைபு 2.3.3.1 : வரியல்லாத வருமானம்**




**அட்டவணை 2.3.3.1- வரியல்லாத வருமானம்**

ரூ.மில்.

| விடயம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 (தற்காலிக) | 2017/2018 (% மாற்றம்) | 2018 (மொத்த வரியல்லாத வருமானம்%) |
|---|---|---|---|---|---|---|---|---|
| வட்டி / வாடகை | 11,995 | 13,647 | 46,705 | 15,806 | 11,845 | 13,731 | 15.9 | 6.6 |
| இலாபங்கள், பங்கிலாபங்கள் | 35,169 | 46,814 | 66,255 | 77,917 | 53,998 | 41,828 | -22.5 | 20.1 |
| விற்பனைகள், கட்டணங்கள் | 40,721 | 35,499 | 131,552 | 144,844 | 70,227 | 105,240 | 49.9 | 50.7 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு | 15,145 | 14,919 | 11,995 | 13,647 | 22,940 | 25,215 | 9.9 | 12.1 |
| மத்திய வங்கி இலாப மாற்றல்கள் | 26,350 | 11,500 | 35,169 | 46,814 | - | 15,000 | - | 7.2 |
| ஏனையவை | 2,173 | 22,466 | 40,720 | 35,499 | 2,486 | 6,642 | 167.2 | 3.2 |
| **மொத்தம்** | **131,552** | **144,845** | **332,395** | **334,526** | **161,496** | **207,656** | **28.6** | **100.0** |

*மூலம் : திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம், அரச கணக்குகள் திணைக்களம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## 3.0 அரசிறைக் கொள்கை மூலோபாயங்கள் மற்றும் சவால்கள் - 2018

### 3.1 அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயங்கள்

அரசாங்கத்தின் நிதி மூலோபாயமானது வருமானங்கள் , செலவினங்கள் மற்றும் அதன் படுகடன் குறைப்பு நோக்கங்கள் என்பனவற்றிற்கிடையே சமநிலை பேணல் இலக்குகளை கோடிட்டுக் காட்டுகிறது. 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவம் (பொறுப்பு) சட்டமானது பொறுப்பான அரசிறை முகாமைத்துவத்திற்கான கொள்கைகளை விதிப்பதோடு இக்கொள்கைகளோடு இணங்கும் வகையில் அரசாங்கம் அதன் அரசிறை மூலோபாயத்தையும் அமைக்கவேண்டுமெனவும் வேண்டுகிறது. அரசாங்கத்தின் படுகடன்களை சாத்தியமான மட்டங்களுக்கு குறைத்தல், நிதி சார் இடர்வுகளை சாத்தியமான முறையில் முகாமைசெய்தல், அரசாங்க செலவினங்கள் மற்றும் வரி விதிப்பனவு தொடர்பிலான கொள்கைகளை உருவாக்கல் மற்றும் அரசாங்க உத்தரவாதங்கள் மற்றும் அரசாங்க படுகடன்கள் என்பன பரிந்துரைக்கப்பட்ட எல்லையைத் தாண்டவில்லை என்பதனை உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களும் இதில் அடங்கும். நடுத்தரக் காலத்திற்கெதிராக அதிகரித்த வருமானத் திரட்டின் மூலம் ஒத்துழைக்கப்பட்டு பொதுப் படுகடன் நிலுவை மற்றும் அரசிறைப் பற்றாக்குறை என்பனவற்றில் நிலையானதொரு குறைப்பினை அடையப்பெறுவது என்ற அரசிறை மூலோபாயத்தின் பிரதான முன்னுரிமைச் செயற்பாடு சூழலின் பின்னணியில் அரசாங்கம் அர்ப்பணித்துச் செயற்படுகிறது. அதன்பிரகாரம், அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்ட பற்றாக்குறையானது நடுத்தர காலத்தில் நம்பகமானதொரு அரசிறைத் திரட்சிக்கான பாதையினை உறுதிப்படுத்தியுள்ளதோடு, 2018 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற 4.9 சதவீத்த்திலிருந்து 2019 ஆம் ஆண்டில் மொ.உ. உற்பத்தியில் 4.1 சதவீதத்திற்குப் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையினைக் கட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு, இது நடுத்தரக் காலத்திற்கெதிராக மொ.உ.உற்பத்தியில் 3.5 சதவீதத்தில் திரட்சியடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. 2017 ஆம் அண்டில் சாதகமான நிலைக்குத் திரும்பிய மேலே குறிப்பிடப்பட்ட ஆரம்ப மிகையிலிருந்து பயனடைந்து 2018 ஆம் ஆண்டின் இறுதியில் மொ.உ.உற்பத்தியின் 76.6 சதவீத மதிப்பீட்டிலிருந்து 2022 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறக்குறைய 66 சதவீத்த்திற்கு அரசாங்கத்தின் படுகடன் நிலுவையினைக் குறபைபதற்கு அத்தகைய வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைக் குறைப்பானது வழி வகுக்கும். 2018 ஆம் ஆண்டில் மொ.உ. உற்பத்தியின் 0.7 சதவீத மதிப்பீட்டிலிருந்து 2019 ஆம் அண்டில் மொ.உ.உற்பத்தியின் 1.8 சதவீதத்திற்கு ஆரம்ப மீதியினை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

2018 ஆம் ஆண்டில் வரிவிதிப்பனவு மற்றும் அதன் நிர்வாகம், செலவின முகாமை, அசாங்க படுகடன் முகாமை, அரசுடமைத் தொழில்முயற்சிகள், பொது நிதி மற்றும் பெறுகை முகாமை மற்றும் ஏனைய துறைகள் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட துறைகளில் அரசிறை இலக்குகளை அடையப்பெறுவதற்காக பல்வேறுபட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம் போன்ற வருமான சேகரிப்பு நிலையங்களில் வரி நிருவாகத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், வினைத்திறனான அரச நிதி முகாமைத்துவத்திற்கான இலத்திரனியல் பெறுகை முறைமை, அரசுடமைத்தொழில் முயற்சிகளின் நிதிச்செயலாக்கத்தில் பாரியளவில் வெளிப்படைத் தன்மையினை வெளிக்கொண்டுவரும் வகையில் பிரதான அரசுடமைத் தொழில்முயற்சிகளுடன் கூட்டிணைவு இணக்க ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமை மற்றும் எரிபொருட்களுக்காக சந்தை விலையிடல் முறைமையினை அறிமுகப்படுத்தியமை உள்ளடங்கலாக பல துறைகளில் பரந்தளவிலான மறுசீரமைப்பு நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் நடைமுறைமுறைப்படுத்தப்பட்டன.அரசிறை வேலைச் சட்டகப் பணியின் இவ்விரிவான முன்னோக்குகளுக்குள், "காம்பெரிய நிகழ்ச்சித்திட்டம்" ஊடாக விரைவான கிராமிய மற்றும் நகர்ப்புற வளர்ச்சியினை அடைவதற்கும், என்டரைஸ் லங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக தொழில்முயற்சியாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கும், கவனமாக வடிவமைக்கப்பட்ட 'சமுர்த்தி' சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் ''வறியவர்'' களையும் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களை பாதுகாத்து வலுவூட்டுவதற்கும் மற்றும் ஏனைய மானிய நிழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்குமாக பல முக்கிய துறைகளில் பல விடங்கள் முன்னுரிமையளிக்கப்பட்டன.

## 3.2 பிரதான அரசிறை சவால்கள்

எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியை விடவும் பொருளாதார வளர்ச்சி மந்தமடைந்தமை மற்றும் பல்வேறுபட்ட வருமான நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம் என்பன காரணமாக 2018 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் அரசிறைத் திரட்சி செயல்முறைக்கு பிரதானமாக பூகோள மற்றும் உள்நாட்டு பொருளாதாரத்தில் ஏற்பட்ட சமீபத்திய முன்னேற்றங்கள் சவால்களை ஏற்படுத்தின.

**வருமான மேம்பாட்டினை விரிவுபடுத்தல்-** அரசாங்கம் ஏற்கனவே ஆரம்பித்த நடவடிக்கைகளிலிருந்து பலம்பெற்று வருமானம் திரட்டும் முயற்சிகளைத் தொடர்ந்துள்ளது. எவ்வாறாயினும், நேரடி மற்றும் மறைமுக வரிகளின் நியதிகளின் அடிப்படையில் வருமான விரிவாக்கத்தில் சில சவால்கள் ஏற்பட்டுள்ளன. உயர்தொழில்புரிநர்களுக்காகசெலுத்தப்பட்ட சேவைக் கட்டணங்கள் மற்றும் பணியாளர்களுக்கான வருமான வரியினை பிடித்துவைப்பதற்காக தொழில்வழங்குநர்களின் கடப்பாடு தொடர்பில் கணக்காய்வுகளை நடாத்தல் மற்றும் இடர்வுகள் அடிப்படையிலான கணக்காய்வு மூலம் பெறுமதிசேர் வரி இணக்கப்பாட்டு மூலோபாயமொன்றினைச் செயற்படுத்தல் மற்றும் இதுபோன்ற இன்னும் பல நடவடிக்கைகளினால் ஒத்துழைக்கப்பட்டு வரி வருமான இணக்கப்பாட்டினை பலப்படுத்துவதில் முக்கிய கவனஞ்செலுத்தப்படும்.

**அரசாங்க செலவின முகாமை–** புதிதாகத் தாபிக்கப்பட்ட நலன்புரி சபையினூடாக மேம்படுத்தப்பட்ட இலக்குடன் சமூக பாதுகாப்பு வலைகளை தொடர்வதன் மூலம் ஒட்டுமொத்த செலவின வரையறையினுள் சமூக மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக போதுமான இடம் வழங்கப்படுவதனை அரசு உறுதிப்படுத்துகிறது. இயற்கை அனர்த்தங்களுக்காக அதிகரித்த காப்புறுதித் திட்டம் மற்றும் எதிர்பாரா வரவுசெலவுத் திட்டம் என்பனவற்றினைச் செயற்படுத்துவதன் மூலம் சம்பந்தப்பட்ட அரசிறைச் செலவுகளை இயற்கை அனர்த்தம் மீது செயற்படுத்துவதற்கும் அதிக கவனஞ்செலுத்துகிறது. அவ்வாறே, மீண்டெழும் செலவினத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலம் அரசாங்க செலவினத்தின் வினைத்திறனில் ஏற்படுகின்ற மேம்படுகள் பொது நிதி முகாமையில் அதிகரித்த பாதுகாப்பினை உறுதிசெய்யும்.

**அரசுடமைத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகையினை மேம்படுத்துதல்-** முன்னோக்கி வரும் காலங்களில் அரசாங்கத்தின் அரசுடமைத் தொழில்முயற்சிகளின் நிதி வெளிப்படுத்தல்களை மேம்படுத்துவதற்கான அரசாங்கம் திட்டமிடுகிறது. குறிப்பாக, பிரதான பத்து அரசுடமைத் தொழில்முயற்சிகளுடன் ஏற்கனவே கையெழுத்திட்டுள்ள கூட்டிணைவு இணக்க ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகளைக் கண்காணிப்பதற்கான பொறிமுறையொன்றும் தாபிக்கப்படும்.

**நடுத்தர கால படுகடன் முகாமை மூலோபாயத்தை வலுப்படுத்துதல்–** வலுவூட்டல் செயற்பாடுகளுடன் இணைந்த வகையில் தொடரப்படலாம் எனக் கருதப்படுகின்ற ஏந்தவொரு அதிர்ச்சித் தாக்கத்தினையும் தாங்கிக் கொள்ளும் வகையில் நடுத்தரக் கால அரசிறை வேலைக் சட்டகத்தினை வலுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிதாக இயற்றப்பட்ட தீவிர பொறுப்பு முகாமைச் சட்டமானது ஒட்டுமொத்த இடர்வுகளைக் குறைத்து படுகடன் கடப்பாடுகளின் முதிர்வுக் கால எல்லையினை விரிவுபடுத்தி எதிர்வரும் காலங்களில் வலுவூட்டல் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கான வாய்ப்பொன்றினை வழங்கும். தீவிர பொறுப்பு முகாமை நடவடிக்கைகளின் பயன்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில், நிர்வகிக்க முடியுமான மட்டங்களில் வெளிநாட்டு நிலுவை பொறுப்புகளை அடையச்செய்யும் நோக்கத்துடன், அரசாங்கம் நடுத்தரக் கால படுகடன் முகாமை மூலோபாயத்தனை வலுப்படுத்துகிறது.

## 4.0 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ பொறுப்புச் சட்டத்தின் நியதிகளுக்கு அமைவாக வெளியிடப்பட்ட அறிக்கைகள்

### 4.1 ஆண்டறிக்கை - 2017

குறித்த நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து ஐந்து மாதங்கள் கழிவதற்கு முன்னர் அந்நிதியாண்டு தொடர்பில் பொது மக்களுக்கு வெளியிடுவதற்கும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்குமாக இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை (ஆண்டறிக்கை) ஒன்றினை வெளியிடுவது அவசியமாகும். அதற்கமைய, ஆண்டறிக்கை – 2017 ஆனது 2018 ஆம் ஆண்டு மே மாதத்தில் வெளியிடப்பட்டது.

### 4.2 அரையாண்டு அரசிறை நிலமை அறிக்கை - 2018

குறித்த ஆண்டின் யூன் மாதத்தின் இறுதித் தினத்தன்று அல்லது ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 6 மாதம் கழிவதற்கு முன்பு ஆகிய இரு காலப் பிரிவுகளின் பின்னர் வரும் நாளுக்கு முன்பதாக ஆண்டு தோறும் மேற்குறித்த அறிக்கை வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன், 2018 ஆம் ஆண்டின் அரையாண்டு அரசிறை நிலைமை குறித்த அறிக்கை 2018 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் வெளியிடப்பட்டது.

### 4.3 அரசிறை முகாமைத்துவ அறிக்கை– 2018

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4, 5 மற்றும் 6 ஆவது பிரிவுகளின் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற அரசிறை முலோபாய அறிக்கை,அதே சட்டத்தின் 7, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை தொடர்பிலான அறிக்கை2019 போன்ற இரண்டு அறிக்கைகளையும் உள்ளடக்கிய அரசிறை முகாமைத்துவ அறிக்கையானது 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் வெளியிடப்படுதல் வேண்டும். எனினும் 2019 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

### 4.4 செயலாற்றுகை அறிக்கை

### 4.5 தகவல் அறியும் சட்டம் தொடர்பான பதிவுகள்

**அட்டவணை 4.5.1- 2018 ஆம் ஆண்டுக்காக தகவல் அறியும் சட்டத்தின் கீழான கோரிக்கைகளின் சுருக்கம்**

| | |
|---|---|
| மறுக்கப்பட்ட கோரிக்கைகள் | 10 |
| தகவல் வழங்கப்பட்ட கோரிக்கைகள் | 05 |
| சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்ட கோரிக்கைகள் | 03 |
| மேன்முறையீடுகள் | 05 |
| **மொத்தம்** | **23** |

## 5.0 நிர்வாகம் மற்றும் கணக்குகள் பிரிவின் செயலாற்றுகை

### 5.1 பதவியணிக் கட்டமைப்பு 2018

அரசிறைக் கொள்கைத் திணைக்களம் அனுமதிக்கப்பட்ட 60 பதவியணியினரைக் கொண்டுள்ளது. அதற்கமைய, பின்வரும் அலுவலர்கள் இத்திணைக்களத்தில் பணியாற்றுகின்றனர்.

**அட்டவணை 5.1.1-பதவியணி பற்றிய விபரம் 2018 (2018.12.31 உள்ளவாறு)**

| பதவி | அனுமதிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி | பதவி வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் - இ.நி.சே | 01 | 01 | - |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் - இ.நி.சே. | 01 | 01 | - |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (திறந்த) | 01 | - | 01 |
| பணிப்பாளர்கள் – இ.நி.சே. | 02 | 02 | - |
| பணிப்பாளர்கள் - இ.தி.சே | 01 | 01 | - |
| பிரதிப் பணிப்பாளர்./உதவிப் பணிப்பாளர் - இ.நி.சே. | 09 | 05 | 04 |
| பிரதிப் பணிப்பாளர்./உதவிப் பணிப்பாளர் - இ.தி.சே. | 05 | 05* | - |
| கணக்காளர் - இ.க.சே. | 01 | 01 | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | - |
| மொழி பெயர்ப்பாளர் (ஆங்கிலம் / சிங்களம்) | 01 | - | 01 |
| மொழி பெயர்ப்பாளர் (ஆங்கிலம் / தமிழ்) | 01 | 01 | - |
| அபிவிருத்தி உதவியாளர் | 08 | 08 | - |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 10** | 11 | 01 |
| சாரதிகள் | 07 | 06 | 01 |
| அலுவலக உதவியாளர் | 07*** | 08 | - |
| **மொத்தம்** | **56** | **51** | **08** |

* - சம்பளத்துனுடனான வெளிநாட்டுக் கற்கைக்கான விடுமுறை - 01

** - அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மீளாய்விற்கமைய, பதவியணியானது 03 இனால் குறைக்கப்பட்டது.

*** - அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மீளாய்விற்கமைய, பதவியணியானது 01 இனால் குறைக்கப்பட்டது.

### 5.2 திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2018

#### 5.2.1உள்நாட்டுப் பயிற்சி

| இல | பெயர் | பதவி | நிகழ்ச்சித்திட்டம் | காலம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.டப்.எஸ்.சின்தக | அபிவிருத்தி உதவியாளர் | File Management, General Office Administration and E Code - MILODA | 2018-யூன்-12/13/14 |
| 2 | திருமதி.ஆர்.டி.எஸ்டி. தேசப்பிரிய | அபிவிருத்தி உதவியாளர் | CEEP- MILODA | செப்தெம்பர் 25 முதல் 2018 |
| 3 | திருமதி. வசந்தா ரமனி | அரச முகாமைத்துவ உதவியாளர் | File Management, General Office Administration and E Code- MILODA | 2018-யூன்-12/13/14 |
| 4 | திருமதி. ரமனி திஸாநாயக்க | அரச முகாமைத்துவ உதவியாளர் | File Management, General Office Administration and E Code- MILODA | 2018- யூன்-12/13/14 |
| 5 | திருமதி. ஜீ.ஜீ.யூ.கே. விஜேரத்ன | அரச முகாமைத்துவ உதவியாளர் | Computerized Government Payroll System- MILODA | 2018-யூலை-24/25/26 |
| 6 | திருமதி டப்.என்.ஆர் லாலணி | அபிவிருத்தி உதவியாளர் | Budget Preparation, Monitoring and Treasury Accounting System | 2018 ஓகத். |
| 7 | செல்வி.எம்.ஜீ.ஆர்.எஸ்.தனபால | அரச முகாமைத்துவ உதவியாளர் | Budget Preparation, Monitoring and Treasury Accounting System | 2018 ஓகத். |
| 8 | திருமதி. ரமனி திஸாநாயக்க | அரச முகாமைத்துவ உதவியாளர் | Public Finance Regulations-MILODA | 2018 ஓகத் 15/16/17 |
| 9 | திருமதி. வசந்தா ரமனி | அரச முகாமைத்துவ உதவியாளர் | Public Finance Regulations-MILODA | 2018 ஓகத் 15/16/17 |
| 10 | செல்வி.டப்.ஆர்.மதுவந்தி | அரச முகாமைத்துவ உதவியாளர் | DEJE- MILODA | ஓகத்து 20 முதல் 2018 |
| 11 | கலாநிதி. பி.கே.ஜீ. ஹரிஸ்சந்திர | மேலதிக பணிப்பாளர் நாயகம் | Invitation to Public-Private-Partnership workshop on the PPP Fiscal Risk Assessment Model | 2018 ஒக்தோ 2 - 3 |
| 12 | திரு.ஏ.சாரங்கண் | பணிப்பாளர் | | |
| 13 | திரு.எஸ்.எச்.எஸ். செனெவிரத்ன | உதவிப் பணிப்பாளர் | Diploma in English for Professionals- MILODA | திசெம்பர் 23 முதல் 2018 |
| 14 | திரு. அருனோத நிஸ்ஸங்க | உதவிப் பணிப்பாளர் | Diploma in English for Professionals- MILODA | திசெம்பர் 23 முதல் 2018 |
| 15 | திருமதி. லக்ஷிகா சேனாரத்ன | உதவிப் பணிப்பாளர் | Diploma in English for Professionals- MILODA | திசெம்பர் 23 முதல் 2018 |

| இல | பெயர் | பதவி | நிகழ்ச்சித்திட்டம் | காலம் |
|---|---|---|---|---|
| 16 | திரு.ஜே.எம்.ஆர்.பீ. ஜயசிங்க | மேலதிக பணிப்பாளர் நாயகம் | Bid evaluation in Public Procurement- MILODA | 2018 செப்தெ. 19-21 |
| 17 | திரு.குமுது மீகஹகே | பணிப்பாளர் | Effective Communication Skills and Personality Development through Speech craft- MILODA | செப்தெ. 2018 |
| 18 | திரு.கே.ஏ. விமலேந்திரராஜா | பணிப்பாளர் நாயகம் | Effective Communication Skills and Personality Development through Speech craft- MILODA | |
| 19 | திரு.ஜே.எம்.ஆர்.பீ. ஜயசிங்க | மேலதிக பணிப்பாளர் நாயகம் | | |
| 20 | திரு. கே.எம். குமாரசிறி | உதவிப் பணிப்பாளர் | Annual Borrowing Plan- MILODA | 2018 நவம். 13-16 |
| 21 | திரு.டி.எம்.கே.ஜே.கே.எம். ஏகநாயக்க | அபிவிருத்தி உதவியாளர் | | |

## 5.2.2 வெளிநாட்டு பயிற்சிகள் மற்றும் மாநாடுகள் - 2018

| பெயர் | பதவி | நிகழ்ச்சி | நாடு | காலம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| திரு.கே.ஏ. விமலேந்திரராஜா | பணிப்பாளர் நாயகம் | 8th Round of Sri Lanka – India ECTA Negotiations | இந்தியா | 21.02.2018 - 23.02.2018 | தூதுக்குழு |
| | | Negotiations for the revision of the Agreement for Avoidance of Double Taxation between Sri Lanka and Netherland | நெதர்லாந் | 16.07.2018 - 19.07.2018 | தூதுக்குழு |
| | | 10th Round of Sri Lanka – India ECTA Negotiations | இந்தியா | 02.08.2018 - 04.08.2018 | தூதுக்குழு |
| | | MCC Compact Negotiations | ஐ.அ.இ. | 01.10.2018 - 07.10.2018 | தூதுக்குழு |
| | | Annual Meetings of the World Bank Group and IMF | இந்தோனேசியா | 08.10.2018 - 14.10.2018 | தூதுக்குழு |
| கலாநிதி. பி.கே.ஜீ. ஹரிஸ்சந்திர | மேலதிக பணிப்பாளர் நாயகம் | Strengthened Fiscal Management in Asia | ஜப்பான் | 04.06.2018 - 05.06.2018 | தூதுக்குழு |
| கலாநிதி. எம்.கே.சீ.சேனாநாயக்க | பணிப்பாளர் | International Conference on Innovation and Entrepreneurship (ICIE) | ஐ.அ.இ. | 05.03.2018 - 06.03.2018 | தூதுக்குழு |
| | | Double Taxation Avoidance | லெட்வியா | 13.10.2018 - 21.10.2018 | தூதுக்குழு |
| திரு.ஏ.சாரங்கண் | பணிப்பாளர் | 2018 Ministerial Workshop on Financial Strategy for Developing Countries | சீனா | 06.05.2018 - 12.05.2018 | பயிற்சி |
| | | World Bank's Tax Policy Workshop | இந்தியா | 06.08.2018-10.08.2018 | பயிற்சி |

| பெயர் | பதவி | நிகழ்ச்சி | நாடு | காலம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| திருமதி.டப்.டி.ஏ.டெ பரேரா | வரி ஆலோசகர் | Agreement for the Avoidance of Double Taxation (DTAA) between Sri Lanka and Denmark | டென்மார்க் | 12.02.2018 - 16.02.2018 | தூதுக்குழு |
| | | Legal Design of Taxation Frameworks Relevant to the Asia - Pacific Region | சிங்கப்பூர் | 27.05.2018 - 02.06.2018 | பயிற்சி |
| | | International Visitor Leadership Program (IVLP) | ஐ.அ.இ. | 04.08.2018 - 25.08.2018 | பயிற்சி |
| திருமதி.டி.ஜி.என். குமாரி | உதவிப் பணிப்பாளர் | Managing Capital Flows | இந்தியா | 10.09.2018- 14.09.2018 | பயிற்சி |
| திருமதி.பி.டி.எல். பி. சேனாரத்த | உதவிப் பணிப்பாளர் | World Bank's Tax Policy Workshop | இந்தியா | 06.08.2018- 10.08.2018 | பயிற்சி |
| திரு.டீ.எம்.எஸ்.ஏ. நிரோஷன | உதவிப் பணிப்பாளர் | 2018 Seminar on Training Business & Trade Law Professionals for B & R Countries | சீனா | 01.09.2018- 10.09.2018 | பயிற்சி |
| திரு. கே.எம். குமாரசிறி | உதவிப் பணிப்பாளர் | Macroeconomic Management for effective governance and sustainable inclusive economic growth (Sri Lanka) | சிங்கப்பூர் | 26.02.2018- 02.03.2018 | பயிற்சி |
| | | Financial Development and Financial Inclusion | இந்தியா | 30.04.2018 - 04.05.2018 | பயிற்சி |
| திருமதி.எல்.டி.யூ. எம்.சொய்ஸா | உதவிப் பணிப்பாளர் | Two Years Master's Program of Public Policy (MP2) | ஜப்பான் | 2018 - 2020 | |
| திருமதி.ஆர்.எம். கே.எம் லக்மிணி | உதவிப் பணிப்பாளர் | seminar on Promotion of Trade & Investment in Inland Regions for Developing Countries | சீனா | 10.11.2018 - 30.11.2018 | பயிற்சி |
| திருமதி.சீ.கே. விதான | அபிவிருத்தி அலுவலகர் | 2018 Seminar on South – South Cooperation for Developing Countries | சீனா | 10.072018 - 30.07.2018 | பயிற்சி |
| திரு.ஈ.எம்.கே.ஜீ. கே.எம். ஏகநாயக்க | அபிவிருத்தி அலுவலகர் | Fiscal Reporting - Improving the Coverage Comprehensiveness, Quality & Transparency | இந்தியா | 10.09.2018- 14.09.2018 | பயிற்சி |
| திருமதி டப்.என்.ஆர் லாலணி | அபிவிருத்தி அலுவலகர் | 2018 Seminar on Enterprise Transformation and Innovation Management for Foreign Officials under Belt & Road Initiative | சீனா | 07.092018 - 29.09.2018 | பயிற்சி |

## 5.3 நிதி நிருவாகம் மற்றும் கணக்குகள்

### 5.3.1 வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகள் மற்றும் அதன் பயன்பாடு - 2018

2018 ஆம் ஆண்டில் தலைப்பு இல. 238 இன் கீழ் இத்திணைக்களத்திற்கு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டினால் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்ததுடன்,குறித்த ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்ட விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை5.3.1. 2018 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகள் மற்றும் பயன்பாடு**

| செலவு விபரம் | மதிப்பீடு ரூபா | தேறிய ஒதுக்கீடுகள் ரூபா | மெயச் செலவினம் ரூபா |
|---|---|---|---|
| **மீண்டெழும் செலவு** | **4,080,460** | **4,080,460** | **60,200,617** |
| ஆள்சார் படிகள் | 35,800,000 | 35,582,938 | 32,154,117 |
| பிரயாணச்செலவுகள் | 4,100,000 | 9,938,227 | 9,938,227 |
| வழங்கல்கள் | 2,920,000 | 3,270,788 | 3,260,339 |
| பராமரிப்புச் செலவுகள் | 2,700,000 | 3,100,781 | 2,739,598 |
| ஒப்பந்த சேவைகள் | 4,034,240,000 | 4,027,867,266 | 11,524,987 |
| மாற்றல்கள் | 700,000 | 700,000 | 583,350 |
| **மூலதனச் செலவு** | **1,600,000** | **1,600,000** | **718,079** |
| புனரமைப்பும் மேம்படுத்தலும் | - | - | - |
| பற்றுக்கள் | 1,000,000 | 1,000,000 | 356,793 |
| மூலதன மாற்றல்கள் | - | - | - |
| திறன் அபிவிருத்தி | 600,000 | 600,000 | 361,287 |
| முழு மொத்தம் | **4,082,060,000.00** | **4,082,060,000** | **60,918,697** |

### 5.3.2 அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்கு

2018 ஆம் ஆண்டுக்காக இத்திணைக்களத்தின் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் விபரங்கள் கீழ் வருமாறு அமைகிறது:

**அட்டவணை5.3.2.1முற்பணக் கணக்குகளின் பயன்பாடு - 2018**

| விபரம் | அனுமதிக்கப்பட்ட எல்லை ரூபா | உண்மையான எல்லை ரூபா |
|---|---|---|
| 1. ஆகக் கூடுதலான செலவின எல்லை | 4,000,000 | 4,000,000 |
| 2. ஆகக் குறைந்த பெறுகை எல்லை | 1,700,000 | 1,700,000 |
| 3. ஆகக் கூடுதலான படுகடன் மீதி எல்லை | 15,000,000 | 15,000,000 |

### 5.3.3 கணக்காய்வு ஐய வினா

2018 ஆம் ஆண்டில், நிதி அமைச்சின் முகாமைத்துவ கணக்காய்வுப் பிரிவிலிருந்து 06 கணக்காய்வு ஐய வினாக்களும் தேசிய கணக்காய்வு அலுவலகத்திலிருந்து 21 கணக்காய்வு ஐய வினாக்களும் கிடைக்கப்பெற்றுள்ளதோடு, அவற்றுக்கான பதில்கள் உரிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளன.